


அமரர்.

# தம்பையா பரஞ்சோதி

[ஓய்வுபெற்ற கிராம சேவகர்
திரியாய், கள்ளராவ குச்சவெளி தென்னமரவாடி]

அவர்களின்

## 31ம் நாள் நினைவு மலர்

04.07.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

கடமை கண்ணியம் கட்டுப்பாடு

ஆகியவற்றிக்கு உதாரணமாக

வாழ்ந்து நேர்மை பொறுமை

நிதானம் நாணயம் கண்ணியம்

ஆகியனவற்றைக் கடைப்பிடித்து

எங்களைப் பெற்றுப் பேணி வளர்த்து

அன்பு காட்டி அறிவு புகட்டி

நன் நெறி காட்டி நானிலம்

போற்ற வைத்து எங்கள் இதயங்களில்

எப்போதும் நிறைந்திருக்கும் அன்புப்

பாசமிகு தந்தையே தெய்வமே

எங்களின் அணையாத தீபமே

இம்மலரை தங்களின் பாதத்தில்


சமர்ப்பணம் செய்கின்றோம்.

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவுமலர்



தோற்றம்
05.12.1954

மறைவு
04.06.2015

## அமரர். திரு. தம்பையா பரஞ்சோதி

(ஓய்வுபெற்ற கிராமசேவகர் - திரியாய், கள்ளராவ, குச்சவெளி, தென்னமரவாடி)

## திதிவெண்பா

"சீர்பெருகு மன்மத வருட வைகாசியில்
தீராத அபரபட்ச திருதியையில் - பேறாரு
பெற்ற சீமான் தம்பையா பரஞ்சோதி கணபதியடி
உற்றவருங் கலங்க ஏகினார் காண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தனைக்
காதலான் கூப்புவார்தம் கை

## தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லல் கண்டங் கொண்டடியேன் என் செய்கேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்,
குளிரஎன் கண் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டி பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்வேண்டில் நான்
மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ்இருக்க என்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலம்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனாய் வாழ்வினைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா ஞான சற்குண நேயா
ஒப்பிலா மாமணித் திரிவாசா
வித்தகா ஞான சந்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான**
**பிரதம குருவும், ஆதினகர்த்தாவுமாகிய**
**வேதாகமாமணி பிரம்மஸ்ரீ. சோ.இரவிச்சந்திரக் குருக்கள்**
**அவர்களினால் வழங்கப்பட்ட**

## இரங்கல் உரை

இறைபதம் எய்திய அமரர்.தம்பையா பரஞ்சோதி அவர்கள் தென்னமரவாடியை பிறப்பிடமாக கொண்டவராவார். அன்னார் அரச சேவையில் கிராம சேவையாளராகக் கடமை புரிந்தவர். கிராம சேவையாளராக கடமை புரியும் போது இரவு பகல் பாராது மக்களுக்காக அயராது உழைத்தவர். மழை, சூறாவளி. சுனாமி போன்ற காலகட்டங்களில் பொது சேவையில் மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட்டவர். சிறந்தபக்தி மானாகத் திகழ்ந்த இவர் குச்சவெளி பிள்ளையார் கோவில், தென்னமரவாடி பிள்ளையார் கோவில் திருவிழாக்களில் தனது பங்களிப்பை சிறந்த முறையில் வழங்கியுள்ளார்.

எமது ஆலய திருவிழாக்காலங்களிலும் ஏனைய விசேட காலங்களிலும் முழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். இவரது சிறப்புக்களையும், சேவைகளையும் நிறைய எடுத்துக் கூறலாம். இவருடைய இழப்பு எனக்கு மட்டுமல்ல, எமது ஆலயத்தை சார்ந்த அனைவர், தென்னமரவாடி மக்கள் எல்லோருக்கும் ஈடு செய்ய முடியாததாகும்.

இவருடைய இழப்பால் துயருறும் இவரின் மனைவி, மக்கள், உற்றாருக்கும் எனது மனம் கசிந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களது மீளா துயரிலும் பங்கு கொள்கிறேன்.

ஓம் சாந்தி ஓம் சந்தி ஓம்சாந்தி

இவ்வண்ணம்

சோ.இரவிச்சந்திரக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தம்பையா பரஞ்சோதி

## அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

நாற்புறமும் நீர் சூழ உட்புறத்தே நானிலத்தின் வளங்கொழிக்க கிழக்கிலங்கைத் திருகோணமலை மாவட்டத்தின் வடக்கெல்லைக் கிராமமாகத் திகழ்வது வரலாற்றுப் புகழ் மிக்க தென்னமரவடி அங்கு புகழ்பூத்த மூத்த குடியின் வழித்தோன்றலில் உதித்த தம்பையா புனிதம் தம்பதியினருக்கு முத்துக்களென வந்துதித்த எழுவரில் ஒருவராக 1954ஆம் ஆண்டு மார்கழி 05ஆம் திகதி வந்துதித்தவர் சோதி மயமான பரஞ்சோதி.

அமரர் பரஞ்சோதி அன்புடன் அக்கா என அழைக்க சறோஜினிதேவி என ஓர் சகோதரியையும், அண்ணா என அழைக்க நந்தகுமார் எனப் பெயர் கொண்ட ஆண் சகோதரனையும், தம்பி என அழைக்க அருட்செல்வன், சோதி சிவம், புஸ்பராசா, பாலகிருஸ்ணன், என நால்வரையும் கூடவே தன்னுடன் உடன்பிறப்புகளாகக் கொண்டவர். காலன் கொடுமையினால் தன் கடைசிச் சகோதரன் பாலகிருஸ்ணனை இழந்த துயர் அவரைக் கடைசிவரை வாட்டி வதைத்தது.

இளமையிலே இளமைத் துடிப்பும் குறும்புத் தனங்களும் அவரிடம் காணப்பட்டது. இதனால் கண்காணிப்பும் கண்டிப்பும் மிக்க தந்தையினால் பல தடவை கண்டிக்கப்பட்டவர். பரஞ்சோதி தன் ஆரம்பக்கல்வியினை தனது கிராரமமான தென்னமரவடி அ.த.க. பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியினை செம்மலை ம.வி. யிலும் உயர் கல்வியினை வன்னியில் புகழ்பெற்ற தற்போது தேசிய பாடசாலையாகத் திகழும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் பயின்றவர். இளமையிலே கல்வியில் நிறைந்த ஆர்வம் கொண்டவராகக் காணப்பட்டார். பல்கலைக்கழகம் சென்று பட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறவேண்டுமென்பதில் உறுதியாக இருந்தவர். படிக்கும் காலத்தினில் சொல்லொணாத் துன்ப துயரங்களைச் சுமந்து தன் இலட்சியக் கனவு நிறைவேற ஊண் உறக்கமின்றி உணர்வுடன் கல்வி பயின்றவர்.

உயர்தரத்தினிலே சித்தியடைந்த நிலையில் வேலையானது அவரைத் தானாகவே தேடி வந்தது. படிப்புடன் பயிர்ச்செய்கையிலும் தனது திறமையைக் காட்டிய அவருக்கு "பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் "பதவி தேடி வந்தது. அப்போதே அவரது குடும்ப நிலைமை படிப்பை விடுத்து வேலையினைப் பொறுப்பேற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். இளமையிலே குடும்பச் சுமையினை ஏற்றுக் கொண்ட அவர் தன் தாய் தந்தை சகோதரர்களின் முன்னேற்றம் கருதி வேலையுடன் கூடவே விவசாய முயற்சியினையும் சிறப்பாக மேற்கொண்டு வந்தார்.

பயிர்ச்செய்கை உத்தியோகத்தராக சிறிது காலம் பதவி வகித்து வந்த அவர் பின்னர் கிராம அலுவலராக பதவி மாற்றம் செய்யப்பட்டார். அவரது பதவி மாற்றம் மக்களுக்கான சேவையினை மேலும் சிறப்பாக மேற்கொள்வதற்கு அவருக்கு வழி வகுத்தது. தனது கிராமம், தனது மக்கள் என்பதனை கடமையின்போது சிறப்பாகச் சிந்தித்து செயற்பட்டவர். தனது சேவைக்காலத்தினில் மக்கள் சேவையே மகேசன் என உணர்ந்து, செய்யும் தொழிலே தெய்வம் எனப் போற்றியவர்.

வேலையானது கிடைத்த பின்னரும் படிப்பில் அவருக்கு ஏற்பட்ட ஆர்வம் காரணமாக வெளிவாரியாக "சட்டமானிக் கல்வியினை" சில காலம் பயின்றவர். அதில் தன் திறமைகளையும் வெளிக்காட்டியவர். அவரது குடும்ப சுமை, வேலைப்பழு, அதனால் ஏற்பட்ட நேரமின்மை என்பன காரணமாக அவரால் அதனைத் தொடர்ந்து கற்க முடியவில்லை. வேதனையுடன் இடையில் நிறுத்திக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இல்லற வாழ்க்கையைப் பொறுத்த வரை இல்லற வாழ்க்கையினை இல்லற தர்மம் நிறைந்ததாகவும் விருந்தோம்பல் பண்புடன் கூடியதாகவும் அமைக்க வேண்டுமென்பதில் அசையாத நம்பிக்கை வைத்திருந்தவர். அவரது மனதிற்கு ஏற்ப கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடியினைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை பாலையூற்றினை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பத்மாவதி தம்பதிகளின் மூத்த மகளும் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியராகவும் கடமை புரிந்த திருமகள் தேவியினை ஒருமனதுடன் நின்று பெரியோர்களின் ஆசியுடன் திருமணம் செய்து செல்வச் சிறப்புடன் சிறிது காலம் பாலையூற்றிலும் பின்னர் திருகோணமலை நகரிலும் சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தவர். திருமணத்தின் பின் தன் மனைவியினது பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் நல்லுறவினைப் பேணி நன்மதிப்பினையும் பெற்றுக் கொண்டவர்.

இல்லற வாழ்க்கையில் பரஞ்சோதி திருமகள்தேவி தம்பதியினருக்கு அவர்கள் பெயர் சொல்ல ஐவரைப் பெற்றெடுத்தனர். மூத்த மகள் சர்வாணி அடுத்து கர்சன் என்னும் ஆண் மகவு தொடர்ந்து தட்சாயினி தினுஸ்கா என இரு பெண் குழந்தைகள் இறுதியாக ஆண் மகன் ரிசிபரன் என்னும் பெயருடன் ஐவரென அடையாளமிட்டனர். மகன் கர்சன் தன் கல்வியினை முடித்துக் கொண்டதும். அவரது உயர்வு கருதி அவனை லண்டனுக்கு அனுப்பி வைத்தவர். நோயுற்ற வேளையில் மகன் தன்னுடன் இல்லாமையை நினைத்து மனம் மிக வேதனைப்பட்டவராகக் காணப்பட்டார்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் கொள்ளப்படும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் வள்ளுவனின் பொய்யாமொழிக்கமைய கல்வி கேள்விகளில் வல்ல அவரது எச்சங்களாக கொள்ளப்படும் மழலைச் செல்வங்கள் அவரை சமூகத்தில் தக்க ஒருவராகவும் வல்லவராகவும் உயர்த்தி நிற்பது அவர் பெற்ற பெரும் பேறாகும்.

அமரர் பரஞ்சோதி தன் குடும்பம் தன் உறவு என்பவற்றிற்கு மேலாக தனது கிராமத்தையும் மக்களையும் மேலாக நேசித்தவர். நட்புக்கு இலக்கணமாக் திகழ்ந்தவர். நீதி, நியாயம் , நேர்மை, உண்மை என்பன அவரது தாரக மந்திரங்கள். அமரர் இவற்றிலிருந்து தவறியதுமில்லை தவறியவர்களை மதித்தவருமில்லை.

நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலை காரணமாக இடம்பெயர்ந்த தனது கிராமத்தையும் மக்களையும் மீண்டும் பழைய நிலையிலும் மேலாகக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு அயராது உழைத்தவர். அத்துடன் தனது காலத்தினில் தன் சொந்தக் கிராமத்திலும் கடமை புரிந்த ஏனைய இடங்களிலும் பொது வேலைத்திட்டங்களிலும் பொது அமைப்புகளிலும் பல்வேறு பதவிகளை வகித்துச் சிறப்பாகப் பணி புரிந்தவர். குறிப்பாக ஆழிப்பேரலை , நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை, அதன் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வு, மீள் குடியமர்வு போன்ற சந்தர்ப்பங்களில் தனது உடல் நிலையினையும் பாராது மக்களுடன் மக்களாக நின்று தனது கடமைக்கு மேலதிகமாக இரவு பகல் பாராது சேவை புரிந்தவர். அதற்காக மக்களினாலும் மேலதிகாரிகளினாலும் மதிக்கப்பட்டு போற்றப்பட்டவர்.

அமரர் பரஞ்சோதி தனது கிராமமான தென்னமரவடி மீள்குடியேற்றத்தினை தனியொருவராக நின்று நிறைவேற்றியது மட்டுமல்ல அக்கிராமத்தினது பாதுகாவலராகவும் விளங்கியவர். அங்குள்ள வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதானி ஆகவும், ஆலய பரிபாலனசபை போசகராகவும் ஆலய புனரமைப்பினது காரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தாவாகவும் விளங்கியவர். ஆலய புனரமைப்பு வேலைகளை விரைவில் முடிவுறுத்தி கும்பாபிஷேகம் நடைபெறவேண்டுமென அல்லும் பகலும் அயராது உழைத்தவர். கிராமத்தினது விருட்சமாகவும் ஊருணியாகவும் மிகச்சிறந்த சேவையாளனாகவும் மக்களால் பார்க்கப்பட்டவர்.

சகோதர பாசம் மிக்க அமரர் பரஞ்சோதி அவர்கள் தான் நோய்வாய்ப்பட்ட நிலையில் தன் சகோதரர்களைப் பார்க்க முடியாது அவர்கள் வெளிநாடுகளிலும் உள்ளூரில் தூர இடங்களிலும் இருப்பதை எண்ணி ஏக்கத்துடன் காணப்பட்டார். அதனால் தன்னுடன் கூடவே திருகோணமலையில் இருக்கும் தம்பி புஸ்பராசாவுடன் அழவிற்கு அதிகமாக அன்பு காட்டி வந்துள்ளார். தனது நோய் காரணமாக தன்னுடன் அவர் படும் சிரமங்கள் கண்டு மனம் மிக நொந்து கொண்டவர். தன் நோய் காரணமாக தான் பிரிய நேர்ந்தால் தம்பி புஸ்பராசா தனிமைப்பட்டு விடுவான் என்ற வேதனை அவர் நெஞ்சினை உருக்கிக் கொண்டிருந்தது.

தன்னலமின்றி சேவை புரிந்த அவரை கொடிய நோயானது சில காலம் வாட்டி வதைத்தது. நோயுற்ற நிலையிலும் தன்னால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் ஆலய புனரமைப்பு வேலைகளை நோயின் மத்தியிலும் அடிக்கடி பார்த்து ஆலோசனை வழங்க அவர் தவறவில்லை.

இறுதி மூச்சு வரை நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் வாழ்ந்த அமரர் பரஞ்சோதி அவர்கள் 04.06.2015ஆம் திகதி அன்று விடயலை இவ்வுலகை நீத்து விண்ணுலகம் ஏகிவிட்டார்.

அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுவோமாக!

ஓம்சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன் கருதா பணியாற்றிய பண்பாளர்

அமரர்.தம்பையா பரஞ்சோதி திருகோணமலை மாவட்டத்தில் நமது எல்லைக் கிராமமான தென்னைமரவடி பிரதேசத்தில் மதிக்கப்பெற்ற பூர்வீகக் குடும்பத்தின் வழித் தோன்றல். நம் இனத்தின் மீது – நமது இலங்கைத் தமிழரசுக் கட்சி மீது நீங்காப் பற்றுக் கொண்டு பற்றுறுதியுடன் பணியாற்றிய ஒரு செயல்வீரர்.

விவசாய சேவைகள் திணைக்களத்தில் தமது அரச சேவையை ஆரம்பித்த பரஞ்சோதி அவர்கள், மக்கள் பணியாற்றும் மகோன்னதத்துக்காக கிராம சேவையாளர் பதவியை விருப்புடன் பொறுப்பேற்றவர். இந்த அரும்பணி சேவையிலே மிக, மிக நேர்மையானவர், கண்ணியமானவர் என்று எல்லோராலும் என்றும் மதிக்கப்பட்டுப் போற்றப்படுபவர்.

எண்பதுகளிலும், தொண்ணூறுகளின் பிற்பகுதியிலும் இந்த மிலேனியத்தின் ஆரம்பத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் நமது தமிழ் மக்கள் வன்செயல்களினால் இடம்பெயர்ந்த அவலங்களும், நிலைமை சீரடைய மீளக்குடியமரும் வாய்ப்புகளும் மாறி மாறி துன்ப, துயர சக்கரமாக அரங்கேறின. பிரதானமாக திருகோணமலை மாவட்டத்தின் தென்னைமரவடி, திரியாய் போன்ற எல்லைப் பிரதேசங்களில் நேர்ந்த அவலங்கள் சொல்லுந்தரமன்று.

அச்சமயத்தில் நம் மக்களுக்கு கொழுகொம்பாக நின்று அரும்பணியாற்றிய பெருந்தகை தம்பையா பரஞ்சோதி அவர்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் வாக்காளர்கள், வன்முறைகளினால் மாவட்டத்துக்குள்ளும், மாவட்டத்துக்கு வெளியேயும் இடம்பெயர்ந்து, சிதறுண்ட காலத்தில், தேர்தல் சமயங்களில் இடம்பெயர்ந்த வாக்காளர்களைத் தேடியலைந்து, நேரடியாகச் சந்தித்து, கலந்துரையாடி, இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கான விசேட ஏற்பாடுகளை கவனிக்கச் செய்து, அவர்களை கணிசமாமன அளவு வாக்களிக்க வைத்தமையில் அமரரின் பங்களிப்பு மறக்க முடியாததொன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004 பொதுத் தேர்தலில், இலங்கைத் தமிழ் மக்கள் ஐக்கியப்பட்ட பேரெழுச்சியாக தங்களை வெளிக்காட்டும் பெருநிகழ்வு அரங்கேறியது. திருகோணமலை மாவட்டத்தில் அந்தப் பெரு வெற்றிக்கான காரணகர்த்தாக்களில் அமரரும் ஈண்டு குறிப்பிடத்தக்கவர்.

திரியாய், தென்னைமரவடி மீள் குடியேற்ற செயற்பாடுகளில் அவரது பணி பெருமையுடன் நினைவு கூறத்தக்கது.

நம் இனத்தின் மீது - நம் மக்களின் மீது - நீங்கா வாஞ்சையுடன் செயலாற்றிய ஒரு சேவையாளர் அவர். பயன் கருதாமல் பணியாற்றிய பண்பாளர்

மக்கள் பணி நடவடிக்கையில் இறங்கி விட்டாரானால் கண் துஞ்சார் பசி நோக்கார் பிணி பார்க்கார் தம் நோய் பற்றிக்கூடச் சிந்தியார்.

வெறும் ஆசார சீலர் மட்டுமல்லாமல் ஓர் உண்மைச் சைவராக வாழ்ந்து காட்டிய பெருந்தகை. அவர் தமது பிரதேச ஆலயங்களின் செயற்பாடுகளிலும், திருப்பணிகளிலும் முன்னின்று உழைத்தவர் சமூகத்தை மத வழியில் நெறிப்படுத்தும் முயற்சியில் தளராது நின்றவர்.

அவரது ஆன்மா இறைவன் திருவடியில் நித்தியப் பேரின்பம் அடைய எல்லாம் வல்ல திருகோணமலை ஆதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் திருவருளை வேண்டித் துதிக்கிறேன்.

இரா.சம்பந்தன்

**இரா.சம்பந்தன்**
**நாடாளுமன்ற உறுப்பினர் - திருகோணமலை மாவட்டம்**
**தலைவர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணையும் மக்களையும் நேசித்த சேவையாளர்

அமரர். திரு. தம்பையா பரஞ்சோதி ஓய்வு நிலை கிராம சேவையாளர் அவர்கள் அமரத்துவம் அடைந்து ஒரு மாதம் ஆனாலும் அவருடைய இழப்பை ஜீரணிக்க முடியாதுள்ளது. இவருடைய இழப்பு எவராலும் ஈடுசெய்ய முடியாததொன்றாகும்.

யுத்த காலச் சூழலில் திரியாய், கல்லறாவ, குச்சவெளி, தென்னமரவாடி ஆகிய கிராமங்களின் கிராம சேவையாளராக சேவையாற்றி மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றவர் பல சவால்களுக்கு மத்தியிலும் சாதுரியமாக மக்களின் சேவையை முன்னெடுத்த செயல்வீரன் இவர்.

தென்னமரவாடி கிராம மக்கள் யுத்தத்தின் காரணமாக அக் கிராமாத்தை விட்டு வெளியேறிய பின் அவர்களுடைய மீள்குடியேற்றம் நடைபெற வேண்டுமென்று சதாகாலமும் அக்கறையுடன் செயற்பட்டவர். தென்னமரவாடி கிராமம் மீள்குடியேற்றப்பட்ட பின்பும் சகல வசதிகளுடனும் அம் மக்கள் வாழ வேண்டுமென்று அரும்பாடு பட்டவர். அம்மக்களின் வீட்டுத் திட்டம், வாழ்வாதாரம், கல்வி, சுகாதார, தொழில் வசதிகள், இயல்பு வாழ்க்கை ஆகியவற்றிலும் பல முயற்சிகளை மேற்கொண்டவர். தென்னமரவாடியில் வாழும் மக்களின் பூர்வீக இடங்கள் அண்மைக் கிராம மக்களால் அடாத்தாக பிடிக்கப்படுவதை துணிந்துநின்று எதிர்த்தவர். அரச அதிகாரிகளுக்கும் உண்மை நிலைமைகளை ஆதார பூர்வமாக எடுத்து விளக்கியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த பொழுதும், தனது நோயைப் பெரிது படுத்தாது மக்களின் பணியை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டவர். இனப்பற்றும், மொழிப்பற்றும் கொண்ட இவர் தான் ஓர் அரச ஊழியர் என்பதையும் மறந்து செயற்பட்ட வரலாறுகள் ஏராளம். தென்னமரவாடி மக்கள் மீள்குடியமர்ந்து சகல வசதிகளுடன் வாழ முன்பே அன்னார் எங்கள் மத்தியில் இல்லாதிருப்பது அனைவருக்கும் பெரும் கவலை தரும் சம்பவமாகும்.

நல்லதொரு குடும்பத் தலைவனை, சிறந்த தந்தையை, பாசமிகு சகோதரனை, அன்பு கொண்ட உறவினனை, சிறந்த சமூக சேவகனை இன்று இழந்து நிக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, மக்கள், சகோதரர், உற்றார், உறவினர்களின் மன ஆறுதலுக்காகவும், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திப்போம். அன்னார் விட்டுச் சென்ற பணிகளைத் தொடருவோம். இதுவே அன்னாருக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகும்.

அன்புடன்

க. துரைரெட்ணசிங்கம்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.
திருக்கோணமலை மாவட்டம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுயிர் நண்பன் அமரர் பரஞ்சோதியினது நினைவலைகளிலிருந்து சிலவரிகள்...

துள்ளித்திரியும் பள்ளிப் பருவம் முதல் இன்று வரை அமரர் பரஞ்சோதியும் நானும்அன்றில் பறவைகள்போல் இணைபிரியாத நண்பர்கள். இன்றுவரை எப்பிரிவும் எம்மிடத்தே வந்ததில்லை. அமரர் பரஞ்சோதியுடன் இறுக்கமாகப் பழகிய நாட்களை என்னால் இலகுவில் மறந்துவிட முடியாது. அவன் என் அருமை நண்பன் மட்டுமல்ல நல் ஆசானாகவும் சிறந்த வழிகாட்டியாகவும் இருந்து என்னை வழிநடத்திய வல்லாளன்.

நண்பர்கள் என்ற நிலையிலிருந்து நானும் பரஞ்சோதியும் என்றுமே வேற்றுமை காட்டி நடந்ததில்லை. எவ்விடத்திலும் இருவராக அன்றி ஒருவராகவே செயற்படுவோம். நாட்டுக்கு நாம் இருவராகவும் நமக்குள் நாம் ஒருவராகவும் வாழ்ந்திருந்தோம். இன்பமும் துன்பமும் எமக்குள் சரிபாதி. அவனின்றி நானில்லை நானின்றி அவனில்லை. இது நட்பின் முதிர்ச்சி எமக்களித்த பரிசு.

குடும்ப வாழ்க்கையினைப் பொறுத்தவரை குடும்பத்துக்கு அவன் நல்ல தலைவன். பிள்ளைகளுக்கு நனிசிறந்த பிதா. உடன்பிறப்புக்களுக்கு உன்னத வழிகாட்டி. உறவினனுக்கு உதாரண புருஷன். நட்புக்கு இலக்கணமானவன். அன்புக்கு நல்லடிமையானவன். மொத்தத்தில் அனைவருக்கும் நல்ல நாயகனாவான்.

நல்லொழுக்கமும் நற்பண்புகளும் நிறைந்த நல்ல நண்பர்கள் என்ற வகையில் எம் தலைச்சுமைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சுமைகளையும் தாங்கும் சுமைதாங்கியாக அவனுக்கு நானும் எனக்கு அவனுமாக இருந்துள்ளோம். எமக்கிடையேயான வெளிப்படையானதும் அந்தரங்க மானதுமான விடயங்களின் குறிப்பேட்டுப் பக்கம் ஒன்று அவன் பொருட்டு என்னிடமும் என் பொருட்டு அவனிடமும் பேணப்பட்டது. இவற்றினால் எம் மனச்சுமைகளையும் தலைச்சுமைகளையும் ஒருவர்க்கொருவர் மனம்விட்டு பேசி சுமைகளை இறக்கி நிம்மதி பெருமூச்சடைவோம். நட்பினது உச்சக்கட்டப் பயனாக இதனை நாம் நோக்கினோம்.

இறுதிக் காலகட்டத்தில் நோயின் கொடுமையினால் மனம் மிக நொந்து நலிவடைந்த நிலையிலும் சற்றும் தளராமல் தன் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி வெற்றியும் கண்டவன். நோயின் கோரப்பிடியிலிருந்து விரைவில் மீண்டெழுந்து எம் விடியலுக்கு வழிசமைப்பான் என நான் நம்பினேன். 2015ம் ஆண்டு ஆனி மாதம் 4ம் நாள் விடியலை கிடைத்த அதிர்ச்சித்தகவல் என் வாழ்வில் வெடிகுண்டாக வெடித்தது. என் உடலும் உள்ளமும் சிதறியது. செய்வதறியாது பதறி அழுதேன். என் அருமை நண்பன் பரத்தினைப் பார்ப்பதற்கு பறந்து ஓடினேன். தன் பரிவாரங்களுடன் இறுதி யாத்திரைக்குப் புறப்படுவதாக படுத்திருந்து மௌனமாகப் பதில் சொன்னான். கண்கள் கலங்கி விழிநீர் சொரிந்தது. கைகள் பதறியது. காலனவன் என் கண்களில் பட்டிருந்தால் காலால் உதைத்து உன்னை மீளாத்துயரில் இருந்து மீட்டிருப்பேன். முடியவில்லை. என் எண்ணம் பலிக்கவில்லை. காலனவன் வென்றுவிட்டான். சென்று விட்டாய் என்னை விட்டு நீயும். விதியின் கொடுமையிது வேதனையால் வாடுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் எனக்கு நண்பரென யாருண்டு. நீயில்லாத என்னுடல் பலவீனமடைந்து விட்டது. தனிமை என்னை வாட்டுவதாக உணர்கின்றேன். உலகம் என்முன் இருண்டு காணப்படுகின்றது. விழிகளில் நீர் தேங்க மறுக்கின்றது. என்னுடலானது உணவினை ஒறுக்கின்றது. மொத்தத்தில் என் வாழ்வு சூனியமாக்கப்பட்டுவிட்டது.

"நண்பா மீண்டும் உனக்குப் பிறப்புண்டேல்
யாண்டும் எனை நோக்கி நீ வர வேண்டும்"

"அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாள்"

உன் ஆத்ம சாந்திக்கும் மீண்டும் பிறவா நிலை வேண்டியும் இறைவனை இறைஞ்சுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**க.மகாதேவராஜா (மாதவன்)**
**ஓய்வுநிலை உதவி ஆணையாளர்,**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம்,**
**கிளிநொச்சி.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் உறங்கியது ஏனோ

உலகில் பிரம்மா படைத்த பல்லாயிரக்கணக்கான உயிர்களில் மனிதர் பிறவி என்பது மகத்தானது உயிர்வந்தது முதல் உயிரோட்டமான வாழ்க்கை வரை வித்திடும் அந்த மனிதப் பிறப்பு அற்புதமான அந்த மனிதப் பிறப்பு எடுத்துவாழும் உயிர்கள் கோடான கோடி. ஆனாலும் படைத்தவன் நோக்க வாழும் மனிதம் என்பது அற்பமானது அபூர்வமாக அந்த அற்பமாமன மனித உயிர்களில் உங்களை ஒரு மனிதனாக நான் கண்டேன். உங்களிடம் நான் கற்றது. ஏராளம் ஆனாலும் இன்னும் கற்பதற்கு கடவுள் கண்திறக்கவில்லை என்பது எனது ஆன்மாவை வலுவாக சுட்டெரிக்கின்றது.

நான் உங்களை நேசித்தது ஏராளமான வடிவங்களில், ஆன்மீகத்தை போதித்த ஓர் ஆன்மீக வாதியாய் அறிவு சொல்லும் நல் ஆசானாக விருந்தோம்பல் செய்திடும் நற்தமிழனாய், கருணை காட்ட காருண்ய வாதியாய், எமது சுமைகளில் பங்கு போடும் ஒருபங்காளனாய், இன்றும் எத்தனை வடிவங்களில் உங்களை நேசித்த மரணித்தவர்களுக்கு மலர் வெளியிடுவது சாதாரணம். அஞ்சலிகள் சொல்வதும் சாதாரணம். ஆனால் என் மூச்சில் எழும் உன்னதவர்களில் உங்களுக்காக எழுதுவதற்கு நான் கற்றுக் கொண்ட தமிழ் இவ்வளவு தான்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய சிரம்தாழ்த்தி கரம் கூப்பி வினயமாக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

ஓம் சாந்தி, ஓம்சாந்தி, ஓம் சாந்தி

**ப.சுதன்**
**சமூக சேவை உத்தியோகத்தர்**
**பிரதேச செயலகம்**
**பட்டினமும் சூழலும்**
**திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்லலுற்ற மக்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றியவர் திரு.பரஞ்சோதி

திரு.பரஞ்சோதி அவர்களது சேவைகள் குச்சவெளிப் பிரதேச மக்களாலும் அவருடன் கடமைபுரிந்த உத்தியோகத்தர்களாலும் என்றும் மறக்கமுடியாதவை சுமார் 26 வருடங்களிற்கும் மேலாக குச்சவெளிப் பிரதேசத்தில் கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றிய வேளை மிகவும் இக்கட்டான யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் இடம்பெற்ற காலகட்டங்களில் தனது உயிரையும், உடல்நிலையையும் கூட கருத்தில் கொள்ளாது அல்லலுற்ற மக்களுக்கு தன்னை அர்ப்பபணித்து அளப்பரிய சேவையாற்றிய ஓர் மாமனிதர். குறிப்பாக திரியாய், தென்னமரவாடி மக்கள் மத்தியில் மக்களோடு மக்களாக அவர்களது கஷ்டங்களை நன்கறிந்து மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மாற்றும் புனர்நிர்மாணப் பணிகளினைச் சிறந்த முறையில் முன்னெடுத்ததோடு தனது கிராம உத்தியோகத்தர் கடமையில் சகலர்க்கும் ஓர் முன்மாதிரியாக கிராமத்தினை வழிநடாத்தும் தலைவனாக நின்று கிராம மக்களின் சமுதாய முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டவர்.

முல்லைத்தீவு மக்கள் இடம்பெயர்ந்து புல்மோட்டைக்கு வந்த போது அவர்களுடனே நலன்புரி முகாமில் தங்கியிருந்து அவர்களது துயர்துடைக்கும் பணியில் ஈடுபட்ட போது நோய்வாய்ப்பட்டும் தனது கடமையைக் கைவிடாது முகாமிலேயே தங்கியிருந்து சேவையாற்றியமை அவரது அர்ப்பணிப்பான சேவைக்கு ஓர் உதாரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குச்சவெளிப் பிரதேச செயலகத்தின் விருத்திக்கு பல்வேறு ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் வழங்கியதோடு மிகவும் ஊக்கமாக இருந்ததையும் என்னால் மறக்கமுடியது.

உண்மையில் திரு.பரஞ்சோதி அரச சேவையாளர்களிற்கு ஓர் முன்மாதிரியான உத்தியோகத்தர் அவர் எல்லோருடனும் அன்பாகவும், நட்புடனும் பழகும் இயல்பும் ஏனையோரிற்கு உதவுகின்ற மனப்பாங்கும் என்றென்றும் நினைவுகூறத்தக்கவை.

ஓர் மக்கள் சேவையாளனாக வாழ்ந்து இன்று இறைவனது திருப்பாதங்களைச் சென்றடைந்த திரு.பரஞ்சோதி அவர்களது இழப்பினால் துயருறும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு திரு.பரஞ்சோதி அவர்களது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**அ. உமாமகேஸ்வரன்**
**பணிப்பாளர்,**
**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**(முன்னாள் பிரதேச செயலாளர், குச்சவெளி)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடமையைத் தாண்டிய கரிசனையான சேவை

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள திரியாய் கிராமம் பல வளங்களோடு செழிப்பாக இருந்த ஒரு கிராமம்.

கலவர காலத்தில் அக்கிராம மக்கள் பல தடவைகள் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து, சொல்லொண்ணாத் துயரங்களுக்கு ஆளாகினார். 1987 முதல் 1990 வரை குச்சவெளிப் பிரிவு உதவி அரசாங்க அதிபராக நான் கடமையாற்றியபோது அக்கிராம மக்கள் மீளக் குடியேற்றப் பட்டனர். அவர்களுடைய பல அத்தியாவசிய தேவைகளைக் கவனிப்பதோடு அவர்களுடைய வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் பொறுப்பும் அரசுக்கு இருந்தது.

அக் கிராமத்திற்கு அப்போது கிராம சேவை உத்தியோகத்தராக இருந்தவர் மறைந்த தம்பையா பரஞ்சோதி அவர்கள். அவர் தனது உத்தியோகத்தை வெறும் கடமையாக மட்டும் கருதாமல் பூரண அர்ப்பணிப்புடன் திரியாய் மக்களுக்குச் செய்யவேண்டிய எல்லா உதவிகளையும் மனமுவந்து செய்து வந்தார். அவருடைய கடமை உணர்வும், அல்லற்பட்ட மக்களுக்கு அவர் ஆற்றிய சேவையும் என்றும் நினைவுகூரக் கூடியவை.

அவரிடம் காணப்பட்ட நற்பண்புகளும், பணிவும், இனிய சுபாவமும் அவருடைய நல்ல உள்ளத்தின் வெளிப்பாடாக இருந்தன.

அவரது இழப்பால் வேதனைப்படும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவருடைய ஆத்ம சாந்திக்காகவும் உளமாரப் பிரார்த்திக்கின்றேன்.

T. குலவீரசிங்கம்
முன்னாள் உதவி அரசாங்க அதிபர்
குச்சவெளிப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகளின் இதய தெய்வம்

அன்பும், பண்பும், அமைதியும் மிகுந்த பெருமகன் அமரர்.தம்பையா பரஞ்சோதி அவர்கள் சமூகத்திற்கு தன்னையே உருக்கி சேவை செய்வதிலும் ஏழை எளிய மக்கள் உயர்விலும் பேரார்வமும் பெருமகிழ்வும் கொண்டவர். அன்னார் அமரத்துவம் அடைந்தது கேட்டு கலங்காதார் யாரும் இல்லை. யானும் ஆழ்ந்த துன்பம் அடைந்தேன்.

இவரை எனக்கு முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்திலிருந்தே நன்கு தெரியும். கல்வியில் சிறந்தவராகவும், ஏனையோருக்கு உதவி செய்யும் பெருமனம் படைத்தவராகவும், பொதுப்பணியில் ஆர்வம் உள்ளவராகவும், இலட்சியப் பற்று உள்ளவ்ராகவும் விளங்கினார்.

இவர் கிராம சேவையாளராகவும் கடமையாற்றிய காலத்தில் மக்களின் சமூக நலனுக்காக தனது சுயபீனத்தையும் பொருட்படுத்தாது அரும் பணியாற்றியுள்ளார். சுயநலமில்லாத அர்ப்பணிப்பான இவரின் மக்கள் சேவையினால் மக்களின் பெரும் மதிப்பையும் ஆதரவையும் பெற்றுருந்தார் அதனுடன் இவரின் அர்ப்பணிப்பான மக்கள் சேவையினால் மேல் அதிகாரிகள் சக ஊழியர்கள் அன்பையும் மதிப்பையும் பெற்றுள்ளார்.

இவரின் மரணம் இவரின் சொந்த ஊர் தென்னமரவாடி மக்களை மாத்திரமல்ல அவர் கடடையாற்றிய குச்சவெளி பிரதேச செயக மக்களையும் பெருமளவு பாதித்துள்ளது. தென்னமரவாடி மக்களை அரசாங்கமே மீளக்குடியேற்ற முன்வராத நேரத்தில் இவரின் துணிவிலும் பெருமுயற்சியிலும் பொது நிறுவனங்கள் மற்றும் நல்லெண்ணம் கொண்ட சில பெரியோர்களின் உதவியுடன் மக்களை மீளக்குடியமர்த்தும் முயற்சியில் வெற்றி கண்டார். சுகயீனத்தின் மத்தியிலும் அவர் மிகக் கஷ்டப்பட்டு உழைத்து இப்பணியை செய்தார். இன்னும் சிறிது காலம் அவர் உயிரோடு இருந்தால் மீள்குடியேற்றம் முழுமையாகப் பூர்த்தியடைந்திருக்கும் மனித நேயம் அர்ப்பணிப்புடன் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைத்திறன் மிக்க இவரது சேவையும், ஆற்றலும் வியந்து கூறத்தக்கவை. ஏழைமக்கள் வாழ்வு. செழிக்க் அரும்பாடு பட்டார் இவரின் இழப்பு சமூகத்தில் நலிந்த மக்கள் அனைவருக்கும் பேரிழப்பாகும்.

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றிய கிராம சேவையாளர்களில் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் சுயநலமின்றி அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய கிராம சேவையாளர்களில் முதன்மையானவராக இவரைக் காண்கிறேன். அவருடன் பல விடயங்கள் பற்றி கலந்துரையாடுவேன். ஆலோசகைகள் பெறுவேன். அவர் எனது உற்ற நண்பர்.

அவர் மக்கட்கு ஓய்வு, ஒழிவின்றி தனது வாழ்க்கையை அர்ப்பணித்து சேவை செய்தார். ஆனால் தன் குடும்பத்திற்கு பிள்ளைகளின் எதிர்காத்திற்கு செய்ய வேண்டிய கடமைகளை முழுமையாக செய்ய விடாது காலன் இடையில் அவர் உயிரை கவர்ந்து விட்டான் இதை என்ன விதி என்று சொல்வது.

பிறர்பிள்ளைகளை தடவ தன் பிள்ளைதானே வளரும் என பெரியோர் கூறுவர். ஆகவே அவர் செய்த புண்ணிய பலத்தினாலும், ஆண்டவன் கிருபையாலும் அவர் குடும்பத்திற்கு நல் வாழ்வு கிடைப்பது திண்ணம் என நம்புவோமாக.

மாண்டார் மீண்டும் வரமாட்டார் என்னும் நியதிக்கிணங்க அன்னாரின் ஆழ்ந்த சேவையை என்றும் மனதில் நிறுத்தி அன்னாரின் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவன் அடியில் உறைந்து நித்திய வாழ்வு பெறவும் பிரார்த்திக்கின்றேன்.

**ந.அருணாசலம்**
**ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்**
**குமுழமுனை, முல்லைத்தீவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னமரவடி மக்களின் இரங்கல்

ஐயா பரஞ்சோதி எங்கள் அன்புத்தெய்வமே. நீங்கள்

பிறந்தமண்ணுக்கு 2010ம் ஆண்டில் எம்மை ஒற்றையடி

பாதையினால் எம்மண்ணில் சேர்த்தீர் ஐயா

கோயில் கட்டுவோம் கும்பாபிசேகம் செய்வோம்

வீடு கட்டி குடியிருப்போம் என எத்தனை, எத்தனை

ஆசைகளுடன் எங்களை அழைத்து வந்தீர்கள்.

எங்களுக்கு வழிகாட்டியாகவும் நிழல் மரமுமாகி நின்றீர்கள்

உங்கள் ஒவ்வோர் வார்த்தையும் - ஐயா

எங்களுக்கு வழித்துணையாய் நின்றதையா

உங்கள் ஆசையும் எங்கள் ஆசையும் நிறைவேறும் முன்

எல்லோரையும் ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தி விட்டு எங்கு சென்றீர்கள்?

வீட்டிற்கும் சமூகத்திற்கும் நன்மை செய்ய விதிவிடவில்லை

விதியை வெற்றிகொள்ள நினைத்த வேளை நீங்கள் பிரிந்து போனீர்கள்

உங்கள் பிரிவினைக்கேட்டு ஊரே உறங்குதையா

**உங்கள் ஆத்மா சாந்தி அடைய**

**இறைவனை வேண்டிநிற்கின்றோம் ஐயா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரஞ்சோதி - சில நினைவுகள்

1989ம் ஆண்டு கிராம உத்தியோகத்தராக நியமனம் பெற்று குச்சவெளி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கு பரஞ்சோதி வந்தபோது தான் எனக்கும் அவருக்கும் அறிமுகம் ஏற்பட்டது. அக்காலத்திலிருந்தே அவர் நல்ல நண்பராக சிறந்த உத்தியோகத்தராக மனித நேயம் மிக்க மனிதராக இருந்தார்.

மக்களுக்கு உதவி செய்யச் சென்று அவர் உபத்திரவத்தில் சிக்கியதும் உண்டு. 1990 ஆண்டு மக்கள் இடம் பெயர்ந்திருந்த காலத்தில் திரியாய் பகுதியில் அகதிகளாக இருந்த மக்களுக்கு உதவி செய்யச் சென்று சந்தேகத்தின் பேரில் பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்பட்டு தனது நேர்மையான நடத்தை மூலம் விடுதலையானார்.

அதன் பின்னரும் அந்த பயங்கர காலகட்டத்திலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் நிவாரணம் போன்ற உதவிகளை திரியாய் பகுதிக்குச் சென்று வழங்கி வந்தார்.

சுனாமி அனர்த்தத்தின் போது நேரம் காலம் பார்க்காது பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட அனைத்துமக்களுக்கும் உதவி செய்தார். ஒரு முறை நடுநிசியில் கொட்டும் மழையையும் பாராது பாதிக்கப்பட்ட மக்களுக்காக உலர்நிவாரணம் கூடாரம் போன்ற அத்தியாவசியப் பொருட்களை கச்சேரியிலிருந்து பெற்றுக் கொண்டு வந்து கையளித்ததை மறக்கமுடியாது.

இன்றைய திரியாய் பகுதியின் அபிவிருத்தியில் பரஞ்சோதி மற்றும் புஸ்பநாதன் இருவரதும் பங்களிப்பு அளவிடமுடியாததாகும். அரச உதவிகளுக்கு மேலதிகமாக பல்வேறு வெளிநாட்டு, உள்நாட்டு தொண்டர்நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு வீடுகள், வீதிகள் பொதுக்கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்பட வழிவகுத்தனர்.

உதவி கேட்டுவந்தவர்களை இனம், மதம், மொழி வேறுபாடுகள்பாராமல் எந்த நேரத்திலும் அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுத்தவர். அவரது தொலை பேசிக் கட்டணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பகுதி பிறருக்கு உதவிசெய்வதற்காக எடுத்த அழைப்புகளுக்கானவையாகவே இருக்கும்.

குச்சவெளி பிரதேச மக்களது தொலைந்த பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவு பிரதிகள் எடுத்துக்கொடுத்தல், பதிவுகள் இல்லாதோருக்கு காலம்தாழ்த்திய பதிவுகள் வைத்துச் கொடுத்தல் வன் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடுபெற்றுக் கொடுத்தல் போன்ற அலுவல்களை அந்த மக்களுக்கு மிகுந்த அக்கறையுடன் செய்து கொடுத்துள்ளார். இதற்காக அவர் எதுவித பிரதிஉபகாரமும் பெற்றக் கொண்டதுமில்லை, எதிர்பார்த்ததுமில்லை என்பதை நான் நன்கு அறிவேன்.

நேர்மையினமாக நடப்பவர்களை அவருக்குப் பிடிக்காது, அவர்கள் எவ்வளவு செல்வாக்கு உள்ளவர்களாக இருப்பினும் நியாயத்துக்காக் துணிந்து எதிர்த்து நிற்பார்.

தென்னமரவாடி கிராம மக்கள் சகல வசதிகளையும் மீளக் குடியமர்த்தி அவர்களுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். என்ற கனவு அவரிடம் இருந்தது. கடமையிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் தனது உடல் நிலையையும் பொருட்படுத்தாது பல்வேறு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதில் கடைசி வரை செயல்பட்டார்.

துணிவு, சேவைமனப்பாங்கு, நேர்மை, திறமை, மனித நேயம், ஆளுமை போன்ற தலைமைத்துவம் பண்புகளுடன் இருந்த ஒரு நல்ல மனிதருக்கு நண்பனாக இருந்ததுடன் சுமார் 20 வருடங்கள் அவருடன் ஒன்றாகக் கடமையாற்றக் கிடைத்ததையிட்டு பெருமையடைகிறேன்.

தன்னால் ஒரு பட்டதாரியாக முடியாமல் போனதையிட்டு மிகவும் வருந்தினார்.

ஈடு செய்ய இயலாத துயரைத்தாங்கி நிற்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் பரஞ்சோதியின் ஆன்மா சாந்தியடைய பிராத்திக்கின்றேன்.

**நா.செல்வநாயகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.பரஞ்சோதிக்கு எமது குடும்ப அஞ்சலி

எங்கள் குடும்ப நண்பர் பரஞ்சோதி அமரராகிவிட்டார். அன்னாரின் ஈடுசெய்ய முடியாததொன்றாகும். பள்ளி வாழ்க்கையில் நான்காம் ஆண்டில் இணைந்த நண்பன் பரஞ்சோதி அந்த நட்பை அமரன் அடி சேரும்வரை பேணிவந்தார்.

பள்ளி வாழ்க்கையிற் தொடங்கிய நட்பு இடப்பெயர்வையடுத்துக் குடும்ப நட்பாகியது அவரது தாய், தந்தை, சகோதரர்கள் அனைவரும் எமது வீட்டிலே வந்து தங்கி வாழ்ந்தார்கள். அக்காலத்தில் அந்தக் குடும்பம் முழுவதும் மிகவும் நெருக்கமான நட்டைப் பெருக்கிக் கொள்ள முடிந்தது.

பள்ளிப்பருவத்தில் இருந்து பரஞ்சோதியுடன் அவரது தென்னைமரவடிக் கிராமத்துக்குப் பல தடவை சென்றிருக்கிறேன்.

பரஞ்சோதியிடம் நான் கண்டு பெருமைகொண்ட விடயங்கள் பல பல. பரஞ்சோதி தனது தென்னைமரவடிக் கிராமத்தைத் தாயை நேசித்ததுபோல நேசித்தார். அத்துமீறிய சிங்களக் குடியேற்றத்தை அகற்றுவதற்கும் அங்கிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்களை மீளக் குடியேற்ற வேண்டும். என்றும் அல்லும் பகலும் அயராது பாடுபட்டவர். அந்தப் பணியிற் தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துச் செயற்பட்ட செயல்வீரன். தனது உடல் நலமின்மையைக் கூடக் கவனிக்காமல் மண் மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்.

பரஞ்சோதி ஒரு சிறந்த நட்புக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். நண்பர்களின் நலனின் மிகுந்த ஈடுபாடு கொண்ட காரணத்தால் ஏராளமான நண்பர்களைச் சம்பாதித்துக் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியையும் தமிழ் மக்களையும் நேசித்த குடும்பத்திற் பிறந்த அவரது உடன் பிறப்புக்கள் கூட தமிழ்ப் பற்றாளர்களாக விளங்கியிருக்கின்றார்கள்.

எங்கள் குடும்பத்தவர்கள் அனைவரது அன்பையும் கவர்ந்த பரம்சோதியின் இழப்பு எங்கள் இதயங்களில் மாறாத மனக்கவலையைத் தந்துவிட்டது.

எமக்கே இவ்வாறு துன்பம் என்றால் அன்பான மனைவி அருமைப் பிள்ளைகள் ஆருயிர்ச் சகோதரர்கள் எவ்வாறு துன்பத்தில் இருப்பார்கள் என்பதை எண்ணும்போது வேதனை அதிகரிக்கின்றது.

அன்பு நண்பன் பரஞ்சோதியின் இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தவர்களுடனும் உறவினர்களுடனும் நண்பர்களுடனும் அன்பர்களுடனும் துயரைப் பகிர்ந்து கொள்கிறோம்.

யாருக்கும் தீமை செய்யாத. எல்லோருக்கும் நன்மை செய்த அந்த அன்பு நண்பன் இறைவனுடன் இணைந்து ஆத்மசாந்தியடைவான் என்பதில் ஐயமில்லை.

**உற்ற நண்பன்**
**க.சக்தியசீலன் குடும்பம்**
**கணுக்கேணி மேற்கு.மாமூலை**
**முள்ளியவளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் நினைவுகள் இறக்கவில்லை

பரம், எங்கள் இனிய நண்பா
இனி நாம் உன்னைக் காணமுடியுமா?
கதைத்து மகிழவும்தான் முடியுமா?

காலன் எவ்வளவு கொடியவன்
கண் காணமுடியாத இடத்துக்கு
உன்னைக் கொண்டு சென்றுவிட்டான்

எங்கள் இனிய நண்பா
நீ இறந்துவிட்டாய்
உன் நினைவுகள் இறக்கவில்லை

உன்னிடம் பழகிய நாட்கள்
பசுமையான அந்தச் சம்பவங்கள்
பசுமரத்தாணியாய் இதயத்தில் இறுகிவிட்டதே.

நண்பா நீ தமிழை நேசித்தாய்
தமிழ் மண்ணை பிரேமித்தாய்
மக்களை ஆசித்தாய்

எம்மையெல்லாம் சிரிக்கவைத்தவன் நீ
எம்மை நேசித்தவன் எம்மால் நேசிக்கப்பட்டவன்
எம்மை விட்டு ஏன் சென்றாய்?

காலன் உன் காலடிக்கு வந்த போது எல்லாம்
ஏமாற்றிப் பலதடவை வாழ்ந்தவன் நீ
இன்று எவ்வாறு அவன் வென்றான்?

சின்ன வயதில் செய்த குறும்புகள்
சிந்தித்துச் சிரிக்கவைப்பவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கிடையே இதயத்தில் திரை இல்லை
எமக்கு மட்டும் தெரிந்த
இனிமையான கதைகள் பல

எத்தனை நண்பர்கள் உனக்கு
எல்லோரையும் அழவைத்து
எங்கே ஒழிந்து கொண்டாய்,

பெற்றோர்க்கு சிறந்த புதல்வன்
கட்டிய மனைவிக்கு கண் போன்றவன்
உடன் பிறந்தவர்களுக்கு உயிர் போன்றவன்

பிள்ளைகளுக்குப் பிரியமான தந்தை
ஊரார்க்கு உதவிடும் கரம் நீ
நண்பர்களுக்கு நலம் வேண்டும்
நலப்பிரியன்

எல்லோர்க்கும் நீ என்றும்
இழக்க முடியாத பொக்கிஷம்
நண்பா உனை இழந்து
நாதியற்று நிற்கின்றோம்

இனி ஒரு பிறப்பிருந்தால்
எமக்கு நண்பனாய் நீ வேண்டும்
இறைவனுடன் நீயிருப்பாய்
இறையுலகில் சந்திப்போம்

**நண்பர்கள் சார்பில்**
**கனக-தவராசா மாமூலை**
**கணா-தர்மலிங்கம், முள்ளியவளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன் நலம் பாராதவர்

அமரர் தம்பையா பரஞ்சோதியும் நானும் ஒரே ஆண்டில் இவ்வுலகில் தோன்றியதால் ஒன்றானோம். எனக்கு உறவினர் என்ற வகையில் மாமா ஆயினும் இளமையில் நல்ல நண்பர்களாகவே இருந்தோம். அக்காலத்தில் நாங்கள் செய்த குறும்புகள் இன்றும் பசுமையாக எம்மனதில் நிறைத்துள்ளன.

அக்காலத்தில் இவர் மிகவும் துடிதுடிப்புடன் இருந்தது மட்டுமன்றி கலகலப்பாகவும் நகைச்சுவையுடனும் பேசி மற்றயவர்களை மகிழ்விப்பதில் இவருக்கு இணையானவர் எங்களில் யாரும் இருந்ததில்லை. அது மட்டுமல்ல திரைப்பட பாடல்களை நன்கு ரசித்து பாடுவதிலும் சாமத்தியசாலியாக திகழ்ந்தார். சற்று உணர்ச்சி வசப்பட கூடியவர், தென்னமரவடி மீது இவருக்கு இருந்த பற்றை அப்போது கூட நான் பலதடவைகள் உணர்ந்துள்ளேன்

பல காரணிகளால் எமக்கிடையே நீண்டகால்ம் தொடர்பு இருக்கவில்லை. 2010ஆம் ஆண்டு 35 வருடங்களின் பின்னர் மீண்டும் இவரை சந்தித்தேன். ஆச்சரியம் என்னவென்றால் என்னால் பழைய இளமையில் கண்ட பரஞ்சோதியை காணமுடியவில்லை. மாறாத அமைதியும் சாந்தமும் கலந்த ஆழ்ந்த சிந்தனையோடு கூடிய அடக்கமான, பண்பான ஒரு நல்ல மனிதனை கண்டேன். இளமையில் இருந்த நகைச்சுவையான பேச்சு இல்லை பதிலா தெளிவான தனது கருத்துக்களை நிதானமாகவும். பழைய நினைவுகளையும், நிகழ்வுகளையும் ஒரு சிறு புன்முறுவலுடன் பகிர்ந்துகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் கண்ணியமான பேச்சும், அன்பான பார்வையும் மற்றவர்களுக்கு உதவவேண்டும். என்ற மனப்பான்மையும் என்னை மிகவும் கவர்ந்தன. கடந்த காலங்களில் அவர் அதுவும் எமது மண்ணில் மக்கள் பெரும் துன்பங்களை எதிர்கொண்ட போது தன்நலன் பாராது மற்றயவர்களுக்காக ஆற்றிய சேவைகள் பற்றி பலரும் கூறியவை எனக்கு இவரிடம் இருந்த மதிப்பை பன்மடங்காக்கியது.

இன்றை உலகில் தன்நலம் பாராது நற்பண்புகளுடனும், நேர்மையாகவும், மற்றயவர்களுக்காகவும் வாழ்ந்து காட்டிய இந்த நல்ல மனிதரை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

என்ற வள்ளுவன் வாக்கை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் இறைவன் இவரை விரைவாகவே வானுலகத்திற்கு அழைத்துள்ளான் போலும் இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**அன்புடன்**
**வைரமுத்து விஜயசிவாஜி**
**அவுஸ்திரேலியா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோயிலிலும் சேவையை மதித்தவர்

திரியாய் கட்டுக்குள பற்று பகுதியில் சிறந்த சேவையாளன் ஒருவர் வாழும் போது அவர் அன்றாடம் வெளிப்படுத்தும் திறமைகள் அவரது பண்பு, தகமைகள், பொருளாதார நிலை என்பவற்றால் முதன்மைப்படுத்தி பேசப்பட்டாலும் ஒருவர் மறைந்த பின் அவரை அனேகரது மனங்களில் நினைக்க வைப்பது அன்னார் சமூகத்திற்கு ஆற்றிய தன்னலமற்ற சேவையாகும்.

எனது மதிப்பிற்கும் அன்பிற்கும் உரியவராக இருந்து அமரராகிவிட்ட சேவையாளனன் திரு.தம்பையா பரஞ்சோதி அவர்களை எனக்கு 1970 ஆம் ஆண்டிலிருந்து நன்கு தெரியும். அவர் 1977ம் ஆண்டிலிருந்து பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தராகவும். 1987ம் ஆண்டிலிருந்து கிராம சேவை உத்தியோகஸ்தராகவும் கடமை புரிந்துள்ளார். இக்காலப்பகுதியில் குறிப்பாக திரியாய், கல்லறாவ, குச்சவெளி, தென்னமரவாடி ஆகிய பகுதிகளில் கிராம சேவையாளராக பணியாற்றிய காலத்தில் சிறந்த தன்னலமற்ற சேவையை ஆற்றியுள்ளார்.

2009ம் ஆண்டு நான் குடும்பத்தாருடன் அவுஸ்ரேலியா வந்த பின் எனது கிராமமாகிய குச்சவெளியில் கிராம சேவையாளராக பொறுப்பேற்று கடமையாற்றினார்.

இங்கு கடமையை பொறுப்பேற்றபின் முதலில் சித்தி விநாயகர் ஆலய நிர்வாக குழுவினருடன் கலந்து பேசி அந்த கோயில் கும்பாபிஷேகத்தை நடாத்த குச்சவெளி வாழ் மக்களும், தனக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி உள்ளார்கள் என என்னிடம் கூறி மகிழ்வடைந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைவிட இவ் ஆலயத்திற்கு நிரந்தர மாதாந்த வருமானம் வரக்கூடிய வகையில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு நிறுவனத்தாரை அழைத்து காணியொன்றை பெற்றுக்கொடுத்து எல்லா வகையான ஒழுங்குகளையும் செய்து கொடுத்துள்ளார்.

இக்காலப்பகுதியில் இவர் நோயினால் பாதிக்கப்பட்டு இருந்தும் தனது சேவைகளை தாமதம் இல்லாது செய்து முடித்தார். அதைவிட தனது கிராமமாகிய தென்மரவாடியில் மக்களை குடியேற்றி அவர்களுக்கு குடிநீர் வசதி, பாடசாலை, பொதுக்கட்டிடம், தபாலக வசதி, வைத்திய சேவை, விவசாயத்தை செய்வதற்கான வசதிகள் என்பவற்றை வெளிநாடுகளில் இருந்து உதவிகளைப் பெற்று அவ் உதவிகளை தன் ஊர் மக்களுக்கு செய்து கொண்டிருக்கும். தருவாயில் அவர் உயிர் பிரிந்துவிட்டார்.

அவர் இறந்தாலும் அவர் ஆற்றிய பணிகள் அம்மக்களை விட்டு நீங்காமல் மக்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும்

பரஞ்சோதி அவர்கள் இறைபதம் அடைந்த இவ்வேளையில் துயருறும் அமரர் அவர்களின் குடும்பத்தினர் , சகோதரர்கள், உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் கோணேசப்பெருமானின் அருளும் ஆசியும் கிடைக்கவும் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றேன்.

**மா.முத்துலிங்கம்**
**அவுஸ்ரேலியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையாளர்- முயற்சியாளர் - பண்பாளர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்தினுள் அமர்த்தப்பட்ட"

அமரத்துவமடைந்த கிராம உத்தியோகத்தர் பரஞ்சோதி அண்ணன் அவர்களின் வாழ்க்கையில் அவருடன் பழகிய நினைவுகளையும் அவர் புரிந்த அளப்பரிய சேவைகளையும் இங்கு ஒரு கணம் மீட்டுப் பார்க்கின்றேன் தனது வாழ்நாளில் தனக்கென வாழாது மக்கள் சேவையே மகேசன் சேவையென கருதி பிறருக்காக வாழ்ந்து காட்டியவர்.

உண்மையில் ஒரு சேவையாளன், முயற்சியாளர், பண்பாளர் தனக்கென ஒரு கொள்கையை உடையவர் அவருக்கு நிகர் இப்பாரினில் யாருமில்லை. அவரின் புன் சிரிப்பு ஒரு கணம் என்னை அவர் பால் ஈர்க்கின்றது,

குச்சவெளி சித்தி விநாயகர் ஆலயம் இன்று புதுப்பொலிவு பெற்ற விளங்ககின்றது எனில் அவரது அயராத முயற்சியே காரணம் அந்த வகையில் அவருடைய செயற்பாடு அமைந்திருந்தது. சிரமதானம், கும்பாபிஷேகம், பொருட்கள் கொள்வனவு, மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம், அன்னதானம், அர்ச்சகர்களின் ஒழுங்கமைப்பு. என பலவகையில் அது அமைந்திருந்தது.

அதே போன்று திரியாய் ஸ்ரீ முத்துமாரியம்மன் மூலஸ்தானம் முதல் தற்போது எழுந்து நிற்கும் மண்டபம் வரை அது காட்சியளிப்பது எனில் அதற்கு மூலகாரணம் அன்னாரேயாகும்.

அதே போன்று தென்னமரவாடி வர சித்தி விநாயகர் ஆலயம் பதிவு முதல் தற்போது எழுந்து நிற்கும் வாத்திய மண்டபம் புனரமைப்பும் அன்னாரது இறைபணிக்கு ஓர் எடுத்துக்காட்டு என்பதை இங்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

ஒரு செயலை முடிக்க வேண்டும் மெனில் 100 % தன்னை அர்பணித்து சேவைபுரிபவர். முடியாது என்பது இவரது அகராதியில் இல்லை. 2009ம் ஆண்டு போர்க்காலச் சூழல் நிறைவடைந்து எமது உறவுகளை மீட்பதற்கு நாங்கள் வவுனியா முகாம்களுக்கு செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய ஒரு நிற்பந்தம் ஏற்பட்டது. இரவு பகல் பாராது குடும்பம் குடும்பமாக மக்களைப் பதிவு செய்து இராணுவ பஸ்வண்டிகளின் மூலம் அவர்களைக் கொண்டு வந்ததுஅவர்கள் வசித்த பிரிவுகளில் அமர்த்துவதற்கான நடவடிக்கைகளில் முழுமூச்சாக செயற்பட்டார்.

அவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்படும் இரு நாட்களுக்கு முன்பும் என்னுடன் தொலைபேசியில் உரையாடி திரியாயை சேர்ந்த கலைஞர் ஒருவருக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் தாமதமடைவதற்கான காரணத்தை கேட்டார். இது அவர் ஒரு சிறப்பான சேவையளன் என்பதுடன் தனது நோய் காலத்திலும் பிறநலனுக்காகவே செயற்பட்டார்

இவரது அடுத்த முயற்சி தென்னமரவாடியிலிருந்து இடம் பெயர்ந்த தமது உறவுகளை அந்த மண்ணில் மீண்டும் குடியேற்றுவதும் அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கி அவர்களது நெற்பயிர்ச்செய்கை காணிகளை பெரும்பான்மை சமூகத்திடமிருந்து மீட்டு உரியவர்களிடம் கையளிக்கப்படுவதும் அத்தோடு தென்னமரவாடி வர சித்தி விநாயகர் ஆலயத்தை மக்களின் வழிகாட்டிற்கு உகந்த ஆலயமாக ஏற்படுத்திக் கொடுத்து மக்களை இன்புற்று வாழ வைப்பது என்பதே அவரது விருப்பம்.

இது விடயமாக நானும் அவரும் பலமுறை கலாநிதி விக்னேஸ்வரன் அவர்களுடன் கலந்துரையாடியுள்ளேன். வர விருக்கும் இந்திய வீட்டுத்திட்டத்தின் மூலம் தென்னமரவாடி மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பது அவரது எண்ணமும் நோக்கமுமாகும் அன்னாரது ஈடேற அந்த தென்னமரவாடி வர சித்தி விநாயகர் அருள்பாலிப்பாராக

அன்பு நிறைந்த பேரொளியாய் இன்சொல் பேசி எம்முடன் மகிழ்ந்த – அந்த உத்தமர் இன்று வையகத்துள் தெய்வமாகி விட்டார் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம்சாந்தி

முற்றும்

**வீ. கோணேஸ்வரன்**
**கலாசார உத்தியோகத்தர்**
**கிண்ணியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெழுகுவர்த்தி போன்ற இம்மாமனிதர்

மெழுகுவர்த்தி உருகி எரிவது மற்றவர்களுக்கு திரு.த. பரஞ்சோதி என்ற மாமனிதரும் உருகித் தன்னை வாட்டியது திரியாய், கல்லராவ, குச்சவெளி, தென்னமரவாடி, என்ற கிராம மக்களிற்கே

அவுஸ்ரேலியா கண்டத்தில் வசிக்கும் நாங்கள் அவுஸ்ரேலிய திருகோணமலை சங்கத்தினால் தென்ன மரவாடியில் பல வாழ்வாதாரத் திட்டங்களை செய்து முடித்தது இப்பெரும் சோதியில்லாமல் நடந்திருக்காது

தென்னமரவாடியில் நாங்கள் செய்து வரும் உதவித்திட்டங்கள் தொடர்பாக நான் அநேகமாக வாரத்திற்கு ஒரு தடவையாவது அவருடன் தொலைபேசியில் பேசி வந்திருக்கின்றேன்.

நான் இறுதியாக அவரிடம் பேசியது அவரின் மரணத்திற்கு 3 வாரத்திற்கு முன்பு கொழும்பு வைத்தியசாலையில் மிகவும் இயலாத நிலையில் அவர் இருந்த பொழுது. அப்பொழுது கூட தென்னமரவாடியில் நாங்கள் அமுல் செய்யவிருக்கும் மருந்துவ வசதித்திட்டம் சம்பந்தமாகபல ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கினேன்.

சிட்னி நகரில் இயங்கிவரும் அவுஸ்ரேலியா திருகோணமலை (Asutralion Assocation Trincomalee) க்கு அன்னாரின் மறைவு பேரிழப்பாகும்.

கடந்த ஒரு வருடகாலமாக நடக்கவும் கஷ்டப்பட்டு பெரும் நோய்வாய்ப்பட்டிருப்பினும் கூட பெருமுயற்சி எடுத்து ஒரு அனர்த்த நிவாரண கட்டிடத்தை தென்னமரவாடியில் நிர்மாணிக்க வழி செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இயலாத நிலையில் இருக்கிறார் என் எண்ணி இரண்டு வாரங்களுக்கு பேசாமல் விட்டால் அவரே அங்கிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு விடுவார்.

கனவும் நினைவும் அவருக்க ஊர்மக்கள் மேம்பாடே இம்மனிதரிடம் அறிமுகமாகிப் பழகியது 3-4 ஆண்டுகளாக இருந்தாலும் அவர் நேர்மையானவரும் கண்ணியமானவர் மாத்திரமல்ல மிகவும் ஆற்றல் படைத்தவர் என்பதனையும் புரிந்து கொண்டேன்

பெரும்பாலும் இப்பெரும் சோதி இருந்திராவிட்டால் தென்னமரவாடிக்கு யுத்தத்தின் பின் மீள்குடியேற்றம் நடந்திருக்கமாட்டாது. அவரின் பெருமுயற்சியில் மீளுங் குடியேற்றத்திற்கு முன்பே நிறுவனங்களின் உதவியைத் தன் திறமையினால் பெற்று தென்னமரவாடிக்கான வீதியை புனருத்தாரணம் செய்வித்தார்

வைத்தியசாலைக் கட்டிலில் படுத்தபடியே எமது செயல்திட்டங்களை நிறைவேற்றி வைத்தார்.

இப்பெரும் சோதி எமது இதயங்களில் அணையாது

**நன்றி**

**சி. சந்திர சொரூபன்**
**சிட்னி**
**அவுஸ்ரேலியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொட்டிழந்தேன்

நான் இவரைத் திருமணம் செய்த நாளில் இருந்து இவர் இறக்கும் வரை எனது நெற்றியில் குங்குமம் குறையாமல் குங்குமப் பொட்டு வைப்பேன். 29 வருடங்கள் எமது திருமண வாழ்வு நிறைவு பெற்றது. இந்த 29 வருடங்களிலும் தினமும் ஒவ்வொரு வேளையும் எந்நேரமும் நெற்றியில் குங்குமப் பொட்டு வைக்கும் போது "அம்பாளே நான் தீர்க்க சுமங்கலியாக வாழ வேண்டும் இவருக்கு நீண்ட ஆயுளைக் கொடு " என்று அம்பாளை மனதார வேண்டித் தான் குங்குமப் பொட்டு வைப்பேன். ஆனால் நான் இன்று குங்குமப் பொட்டு வைக்கமுடியாத நிலையில் உள்ளேன்.

அந் நாளில் இருந்து இந் நாள் வரையும் நான் காரியாலயப் பணியாக செல்லும் இடங்களிலும் காரியாலயத்திலும் மற்றும் பொது இடங்களிலும் காண்பவர்கள் எல்லோரும் ஏன் இவ்வளவு பெரிய பொட்டு வைக்கிறீர்கள் என்று என்னிடம் கேட்பார்கள். நான் கடடையாற்றிய திருமலை கால்நடை வைத்திய காரியாலயத்திலும் என்னைப்பெரிய பொட்டு என்று அழைப்பதாக Dr.R.அருந்தவராசா அவர்கள் எனது பிரியாவிடை நிகழ்வில் உரை நிகழ்த்தும் போது கூறினார்.

"வட்டமான பொட்டதுவோ வானத்துப் பௌர்ணமியோ" என்று நான் வைக்கும் பொட்டைப் பற்றி எழுதியுள்ளார்கள் லண்டனில்இருக்கும் எனது மகன் ப.ஹரிசன் தொலைபேசியில் என்னுடன் கதைக்கும் போது "அம்மா உங்கட மோட்டார் சைக்கிளுக்கு சிக்னல் லைட் தேவையில்லையாம்" என்று திருகோணமலையில் இருக்கும் எனது நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகிறார்கள் என்று நான் வைக்கும் குங்குமப் பொட்டைப் பற்றி கூறி ஏனம்மா அவ்வளவு பெரிய பொட்டா வைக்கிறீர்கள் என்று என் மகன் என்னிடம் கேட்டார்.

என்னை அடையாளம் காட்டுவதற்காக அதிகமாக எல்லோரும் பெரிய பொட்டு வைப்பவர் என்று சொல்லுவார்கள். இனி என் நெற்றியில் இப்பிறவியில் சின்ன பொட்டு, பெரிய பொட்டு, வட்டமான பொட்டு, வானத்துப் பௌர்ணமி பொட்டு என வர்ணனைக்குட்பட்ட குங்குமப் பொட்டு என்னால் வைக்க முடியாமல் போய்விட்டது. நீறில்லா நெற்றி பாழ் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள் ஆனால் என்னைப் பொறுத்தவரை குங்குமப் பொட்டு இல்லாத நெற்றி பாழ் என்று நான் சொல்லுகின்றேன்.

மனைவி
ப. திருமகள் தேவி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரம் வேண்டும்

எப்படி எப்படி
எல்லாமோ
தன் பாசம்
உணர்த்துவாள் அம்மா.....
ஒரேவொரு
கை அழுத்தத்தில்
எல்லாமே
உணர்த்துவார்
அப்பா.......
முன்னால்
சொன்னதில்லை
பிறர் சொல்லித்தான்
கேட்டிருக்கின்றேன்
என்னைப்
பற்றி பெருமையாக
பேசிக் கொண்டிருந்ததை.....
அம்மா
எத்தனையோ முறை
திட்டினாலும்
உறைத்ததில்லை
உடனே
உறைத்திருக்கிறது
என்றேனும்
அப்பா
முகம் வாடும் போது...

உன் அப்பா
எவ்வளவு உற்சாகமாக
இருக்கிறார் தெரியுமா?
என என் நண்பர்கள்
என்னிடமே சொல்லும்
போதுதான் எனக்குத்
தெரிந்தது
எத்தனை பேருக்கு
கிடைக்காத தந்தை
எனக்கு மட்டும் என....
கேட்ட உடனே
கொடுப்பதற்கு
முடியாததால் தான்
அப்பாவை அனுப்பி
இருக்கிறாரோ
கடவுள்....?
சிறுவயதில்
என் கைப்பிடித்து
நடையயில
சொல்லிக் கொடுத்த
அப்பா,
என் கரம் பிடித்து
நடந்த போது
என்ன நினைத்திருப்பார்
லேசாக என் கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுமாறினாலும்
பதறும் என் அப்பா
இன்று நான்
தடுமாறிய போது
பதறாமல் இருக்கிறார்
மீளா துயிலில்...
அம்மா செல்லமா
அப்பா செல்லமா
என கேட்ட போதெல்லாம்
பெருமையாகச் சொல்லி
இருக்கின்றேன்
அப்பா செல்லம் என...!
இன்று
அப்பா சென்ற பின்னர்
நான் யார் செல்லம்...?
எத்தனையோ பேர்
நான் இருக்கிறேன்
எனச் சொன்னாலும்
என் அப்பாவை போல்
யார் இருக்க முடியும்..?
நானும் காட்டியதில்லை
அவரும் காட்டியதில்லை
எங்கள் பாசத்தை...
இருந்தும் காட்டிக்
கொடுத்த கண்ணீரைத்
துடைக்க இன்று
அப்பாவும் இல்லை...
இன்று எங்கே அந்த
புனிதமான தெய்வம்...?
கண்ணீரோடு உங்களைத்
தேடுகிறேன் அப்பா....
என் குரல் கேட்கவில்லையா?
மறு ஜென்மம் இருந்தால்
உங்கள் மகள் ஆக பிறக்கும்
வரம் வேண்டும்....
இல்லையேல் மறு ஜென்மமே
வேண்டாம் அப்பா.
உங்கள் ஆத்மா சாந்தி
அடைய பிரார்த்திக்கின்றேன்.

**உங்கள் மீது**
**உயிராய் இருக்கும்**
**உங்கள் மகள்**
**தக்ஷாயினி பரஞ்சோதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள அப்பாவிற்கு.........

அன்னையவள் கருவறை விட்டு
அகிலம் காண புன்னகை மறுத்து
உன் கைகளில் தவழ்ந்தேன்
அன்பு மகளாய் ......

பிஞ்சு விரல்கள் – உன்
கரம் தொடும் வேளை
நெஞ்சம் இனைத்து
புன்னகை செய்தாய்

தத்தி நடந்தேன் தடக்கி விழுந்தேன்
உன் கரம் கொடுத்தாய் நடைபழக
இன்று நடக்கின்றேன் அப்பா - ஆனால்
நீ மட்டும் என்னுடன் இல்லை
உன் நிழல் கூட துணையில்லை

உன்மடியில் தூக்கம் கொண்டேன்
உன் தூக்கம் செல்லமாய் கெடுத்தேன்
இன்று நீ மட்டும் தூங்குகிறாய்
என் தூக்கம் தொலைக்கின்றேன்
உன் நினைவுகளோடு

நேர் சீராய் உன் வேலைகண்டு
இறைவன் செய்தானோ ஓர் இடமாற்றம்
தன்னருகில் உனை வைத்து
எமை தவிக்க விட்டானோ

தந்தையாக நீ செய்த கடமைகள் பல
மகளாக செய்திட நினைத்தேன்
சில கைமாறு.... வேளைவரும் முன்னே
காலம் பதில் கூறியது ஏனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை உன் முகம் காண அன்புடன் அழைப்பாய்
மாலை உன் கால்கள் பிடிப்பதே - என்
வரமென கொண்டேன் - ஆனால்
கடைசி வேளை எனை கண் திறந்து பார்க்காமல்
கண் கலங்க விட்டதேனோ
ஒரு முறை அழைக்கின்றேன் என்னுடன் இருக்க
மறுமுறை உனை அனுப்ப மனமில்லாத மகளாய்

உன் தடம் பின்பற்றி வந்தேன்
எந்தன் வழிதனை கண்டேன்.
தொடர்ந்து செல்கின்றேன் தனிமையில்
கம்பியில்லா முடவன் போல

பிரிவின் வலி கண்டேன்
கண்ணின் வழி ஈரம் கொண்டேன்
நெஞ்சம் அது நொருங்க உணர்ந்தேன்
எனை விட்டு நீ செல்லும் போது
எங்கு சென்றாலும் புன்னகை மறவாதே
உன் மகள் எனை நினைக்க மறுக்காதே

ஒரு மடல் போதாது அப்பா
என் உணர்வுகளை கூறிட
உள்ளம் முழுதும் நீயே
உயிரிலும் மேல் நீயே
கண்ணில் ஈரமில்லை மேலும்
நினைவுகள் மட்டுமே மீதம்
உயிர் நீத்தும் என்னுடன் இருப்பாய் எப்போதும்.

அன்புள்ள மகள்
ப.தினுஷ்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா........

உயிரிலும் மேலான என் அப்பா
உங்கள் கைபிடித்து நடந்த காலங்களும்
உங்கள் நெஞ்சில் தூங்கிய அமுத நாட்களும்
மீண்டும் எப்போது வரும் அப்பா?

அப்பா என்ற சொல்லிற்கு உயிர்தந்த வள்ளலே
இனி அப்பா என்று யாரை அழைப்பேன் நான்?
உங்கள் பிள்ளைகளை தனியாக விட்டுச் சென்றதேனோ?
எங்கள் உயிரில் கலந்து விட்டீர்கள் அப்பா.

இன்னும் பல வருடங்கள் நீங்கள் எம்மோடு
இருப்பீர்கள் என்று நாம் எண்ணியிருக்க
எதிர்பாரா விதமாக கண்ணிமைக்கும் நேரத்தில்
எம்மை விட்டு பிரிந்து சென்றீர்களே அப்பா

நீதி, நேர்மை, நியாயம் என்று
உங்களிடம் நாம் கற்றது சிறிதே அப்பா
இன்னும் பல கற்க வேண்டிய நாம் எதிர்பார்த்திருக்க
எம்மை ஏமாற்றியது ஏனோ?

அம்மாவும் நாம் ஐவரும் உங்களை இழந்து
படுகின்ற வேதனைகளும் கஷ்டங்களும்
உங்களுக்குப் புரிகிறதா அப்பா? எம்மை
தவிக்க விட்டு சென்றுவிட்டீர்களே தனியாக

உங்களை எம் குழந்தை போல்
பார்த்துக் கொண்டோம் - இறுதியில்
உங்கள் உயிரைக் காப்பாற்ற எங்களால்
முடியாமல் போய் விட்டதே அப்பா

எப்போது அப்பா மீண்டும் உங்கள்
முகத்தை நான் காண்பேன்?
மறு பிறப்பிருந்தால் உங்கள் மகளாக
பிறக்கும் வரம் வேண்டுகிறேன் இறைவனிடம்

அன்புள்ள மகள்
ப. சர்வாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Whished I was there but it was not possible
We knew it was a great loss for you all,
but it is a loss for us too.
In those school days when param was in our company
We never felt the time passing such a lovely person,
he can simply lights up a room with his simile
It was a great oss. Ji I can share one positive in
not seeing him for last two years. when he had
been suffering from illnesses is that i can live up
my rest of the life with his. happy face,
not with his suffered and painful face
I thought you need more time to come
to grips with the life without him

**Jeevan & Kamala**

**Melbourne,**

**Australia**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணன் குடும்பம் இரங்கல்

பாசமுகம்மாறாத தம்பி பரஞ்சோதி பரமசிவம் போல்
எங்களுக்கு பக்கத்துணையாக இருந்து
எங்கள் எல்லோரையும் வழி நடத்தி வந்தாய் ஐயா
அப்பாவும், அம்மாமுவும் தம்பியும் கூட நீயும் சென்றாயோ ஐயா
நாம் மடிப்பிச்சை எடுத்து உங்களின் உயிர் பிச்சை கேட்டோம் ஐயா
பாவிகள் நாம் பரிதவித்து நிற்கின்றோம் ஐயா
நாம் இருவரும் உங்களை காப்பாற்வேண்டி
எத்தனை கடவுளைக் கை எடுத்து நின்றோம் ஐயா
அத்தனை கடவுளும் எங்களை ஏமாற்றி விட்டார் ஐயா
அன்பின் உரைவிடமே அருமைமிகு தம்பியே
அநாதரவாய் எம்மை தவிக்க விட்டு எங்கே சென்றாய் ஐயா
பாசமிகு குடும்பத்தில் நாம் வாழ்ந்தோம்.
சீரோடும் சிறப்போடும் நாம் எல்லாம் வாழ்ந்தோம்
அக்காவும் தம்பிமாரும் அண்ணாவும் அண்ணியும் அன்பு
மனைவி ஆசைக்குழந்தைகள் உற்றார் உறவினர்கள்
எல்லோரையும் தவிக்க விட்டு நீ மட்டும் எங்கே சென்றாய்?
நாம் இனி எப்பிறவியில் உங்களை காண்போம்?
நீங்கள் மறுபிறவி எடுத்து எங்கள் குடும்பத்தில் வருவீர்கள்
என மன நம்பிக்கையுடன் உங்கள் ஆத்மா சாந்தி அடைய
ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் சில காலம்

ஆயிரம் உறவு பல உலகிலிருந்தும்
உயிரோடு கலப்பது சில உறவுகளே
அவ்வாறு என் உயிரோடும் உணர்வோடும் கலந்து
ஒரு உறவு என் பாசத்திற்கும் மதிப்பிற்கும் உரிய
எனது அருமை பெரியப்பாவிற்கு
என்னுள் எழுந்த சில கவி வரிகள்

உங்கள் மேல் வைத்த மதிப்பிற்குரியளவு
மனதினுள் ஏதோ ஒரு வகையான அளவு கடந்த
அன்பும் பாசமும் வைத்திருக்கிறேன்
சிறுவயது முதல் எனக்கு நினைவுதெரிந்த காலம் வரை
என் பெயர் சொல்லி அழைத்ததை விட – ஆசையாய்
'நண்டு" என செல்லமாக அழைத்தீர்கள்

பல உறவுகள் அருகில் இருந்தும் இன்றும் அவ்வாறு
அழைப்பதற்கு நீங்கள் அருகில் இல்லையே பெரியப்பா
பல தவறுகள் செய்தும் பெறாமகள் என்ற உரிமையில்
பலவாறு கண்டித்தீர்கள் அவ் கண்டிப்பை
இழந்து உங்கள் பிரிவால் கண்ணீர் சிந்துகிறேன்.

நற்குணம் கொண்டும் அனைவரின் நன்மதிப்பு பெற்று
இவ்வுலகில் வாழ்ந்தீர்கள்
காலன் அவனின் கண்பட்டதோ தெரியவில்லை – பல
நோய்கள் உங்களை பீடித்து இறுதி காலத்தை
மருத்துவமனையிலேயே கழித்தீர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலக வாழ்வை விட்டு எங்கள் அனைவரையும்
பிரிந்து கடவுளின் பாதத்தை சரணடைய காரணம் என்ன....?

இன்னும் சில காலம் இவ்வுலகில் வாழ்ந்திருந்தீர் எனின் - நீங்கள்
கண்ட கனவுகள் நனவாகியிருக்கும்
அனைத்து வலிகளையும் உங்கள் மனதிலுள் அடக்கி
அமைதியாக கண்மூடி உறங்குகிறீர்கள்.

உறங்குங்கள் பெரியப்பா
நீங்கள் கண்ட கனவுகள் உங்கள் ஆசீர்வாதத்தோடு
நாங்கள் அனைவரும் சேர்ந்து நிறைவேற்றுகின்றோம்
உங்களின் ஆத்ம சாந்திக்காய் என் இறுதிவரை
பிரார்த்திக்கின்றேன்.

**என் பாசமிகு பெரியப்பாவை**
**இழந்த துயரால் துயரும்**
**யதுர்சனா சிவானந்தராஜா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்து சந்திக்கவில்லை நண்பா நாம்
சந்தித்ததை என்றும் சிந்தித்தோம்.
நட்பெனும் பாலங்கொண்டடு தினம் தினம்
நன்மகளால் இன்புற்றோம்.

தென்னவன் மரபில் வந்த தூயவன் நீயல்லவோ
கூற்றனவன் கொடிய செயலால் நண்பனவன் எனக்கில்லையே

உயர்ந்த குருவிடம் பயின்றாய்
உயர்ந்தவனாய் வாழ்ந்தாய்
உணர்வுகள் உனை உயர்த்த
உண்மையாய் நீ உழைத்தாய்

பரஞ்சோதிபேர் கொண்ட பாச நண்பன் எங்கே
பாசத்தோடு சண்டையிட்ட பாங்கானவன் எங்கே
தேடி வந்து உதவி செய்த என்தோழனவன் எங்கே
கதறி அழுகின்றேன் கேட்கின்றதா அங்கே

உயிர் பிரியலாம் உண்மைகள் பிரிவதில்லை
என்றும் நம் நட்பெனும் நினைவுகள்
பிரதிபலிக்கும் என் நினைவில் வாழும்
நியாயமே நீ சாந்தி கொள்வாய்

ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்
கு. புஸ்பநாதன்
- திரியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வத்திலும் மேலான என் அப்பா
## எங்களை எல்லாம் விட்டுப் பிரிந்த நாள்

அப்பா! உங்களுடைய இறுதி
காலத்தில் உங்களுக்கு
சேவை செய்யக் கூட முடியாத
துருதிஷ்டசாலி நான்...

உங்களை குழந்தை போல
பாரத்துக்கொள்ள
வேண்டுமென்ற எனது ஆசை
கனவாகி போனதே அப்பா....

இறுதி காலங்களில் உங்கள்
கூடவே இருந்து உங்களை
மகிழ்ச்சியாக வைத்திருக்க
ஆசைப்பட்டேன் அப்பா...

கடந்த ஆறு வருடங்கள்
உங்களைப் பார்க்காமல்
நான் பட்ட துயர்கள் சொல்லில்
அடங்காதவை...

இனிவரும் காலங்களில்
உங்களது குரலை கூட கேட்க
முடியாத கொடுத்திற்கு ஆளாகி
விட்டேன் அப்பா...

நான் உயிரோடு இருந்தும்
உங்களைப் பார்க்க வர
முடியாமல் இருப்பதை விட கொடியது
வேறொன்றும் இல்லை அப்பா......
இறுதி நேரத்தில் உங்களை
பார்க்க கூட வரமுடியாத
இந்த துரதிஷ்டசாலி மகனை
மன்னியுங்கள் அப்பா....

இதுவரையில் அப்பா என்று
கூப்பிடுவதற்கு என்
உயிரிலும் மேலான ஒரு உறவு
இருந்தது
எங்கே அந்த புனிதமான
உறவு இன்று....??

எனது வாழ்க்கையின்
மிகப் பெரிய இழப்பு
நீங்கள் என் கூட இல்லாதது.

நீங்கள் உங்களைப் பற்றி
சிந்தனை செய்வதை விட
எங்களைப் பற்றி சிந்தனை
செய்ததே அதிகம் அப்பா...

எனது ஆசைகள் அனைத்தும்
கனவாகிப் போய் விட்டதே அப்பா...
உங்கள் ஆசைகளை
நிறைவேற்றுவேன் நான்

உங்கள் வாழ்கையை எங்களுக்காக
அர்ப்பணித்தீர்கள் அப்பா
எங்களுக்காக மிகவும்
கஷ்டப்பட்டு விட்டீர்கள் அப்பா....

அமைதியாக உறங்குங்கள்
ஒருநாள் நானும் வருவேன்
உங்களைத்தேடி நீங்கள்
இருக்குமிடம்..
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்..

**உங்களில் இருந்து உயிர் பெற்ற**
**உங்கள் மகன்**
**பரஞ்சோதி ஹரிசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி

காலத்தின் முடிவற்ற யாத்திரையில்
உம் வரவை
யாம் பெற்ற வரமாய்
பகர்கின்றோம்

இம்மண்ணில்
கிராமத்தின் சேவைக்கும் மேலாக
சமூகத்தின் விடிவுக்காய்
சிந்தித்து
உள்ளங்கவர்ந்த உத்தமராய்
நன்மைகளை சிருஷ்டித்த நாயகனே!

அரச சேவையின் சட்டக் கோவைகள்
அடிக்கடி வருகின்ற சுற்று நிருபங்கள்
அனைத்தையும் உள்வாங்கி
சேவைமூப்புடன், முன்மாதிரியாய்
அனுபவ வேர்களை ஆழப்பதித்து
ஆலோசகராய் வலம் வந்தீர்
அலுவலகம் தன்னில்

யுத்தத்தின் கோரப் பிடியினால்
நோவுற்ற மக்களின்
பசி தீர்க்கப் புறப்பட்ட போது
படைகள் தந்த வதைகளில்
சிக்கித்தவித்த போதும்
பணிதனை புறந்தள்ளாப் பண்பாளனாய்
உள்ளத் திறந்தன்மை வெளிக்காட்டினாய்

வாகனங்கள் வர அஞ்சும்
பாதை தகர்ந்த பயணங்கள்
நிலவும் நாட்களில் கூட
மேலதிகாரியின் கட்டளைகளை
கண்ணியமாய் நிறைவேற்றின - உம்
இரும்புக் கரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி யுத்தத்தில்
இழப்பதற்கு ஏதுமற்று
உயிர் மட்டும் தாங்கி வந்த மக்களை
உறவுகளாய் ஏற்று
வவுனியா சென்று அழைத்து வந்து
இடைத்தங்கல் முகாம் தன்னில்
இருத்தியமை – எம்
இனத்தின் வரலாற்றுப் பணியாய்
பதிவு செய்கின்றோம்

ஆழிப் பேரலையால்
பாலங்கள் தகர்க்கப்பட்ட போது
நள்ளிரவில் கூட
பல கிராம மக்களின்
பசிதனை தீர்த்தன
உம் அன்புக் கரங்கள்

மூன்று தசாப்தங்கள் இருண்டு கிடந்த
"தென்னவன் மரபு அடி" என்னும்
சொந்த மண்ணில்
மறுமலர்ச்சி செய்யும்
கனவை நனவாக்கி
பணி ஓய்வு பெற்ற ஓராண்டில்
இவ்வுலக வாழ்வுதனில்
ஓய்வுபெற்றீரே!

**உம்மை இழந்ததனால்**
**உள்ளம் உருகிடும்**
**பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள்**
**மற்றும் சக உத்தியோகத்தர்கள்**
**பிரதேச செயலகம்**
**குச்சவெளி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 05 - 12 - 1954

இறப்பு 04 - 06 - 2015

தென்மராட்சியைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை, கிறீன் வீதி, 8/12ஐ வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். தம்பையா பரஞ்சோதி

(ஓய்வுபெற்ற கிராமசேவகர்- திரியாய், கள்ளராவ, குச்சவெளி, தென்மராட்சி)

அவர்கள் 2015.06.04ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா, புனிதம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, பத்மாவதி ஆகியோரின் அன்பு மருமகனும், திருமகள்தேவி (ஓய்வுபெற்ற கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்களின் அன்புக் கணவரும், சர்வாணி, ஹரிஷன் (லண்டன்), தக்ஷாயினி, தினுஷ்கா, ரிசிபரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சரோஜினிதேவி, நந்தகுமார், அருட்செல்வம் (லண்டன்), சோதிசிவம் (கனடா), புஸ்பராஜா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - RDA, திருகோணமலை) காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவகுமாரி (விவசாய அமைச்சு), சிவனேஸ்வரன், இராசரத்தினம், பூரண லட்சுமி, மகாலக்ஷ்மி (லண்டன்), கோகிலா (கனடா), சத்தியலோஜினி (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும், சிவஜங்கரன், சந்திரா, தயாளன், பாஸ்கரன், காலஞ்சென்றவர்களான கிருபாமூர்த்தி, சித்திரா ஆகியோரின் பாசமிகு மாமாவும், லண்டனைச் சேர்ந்தவர்களான சுதர்சன், சிந்துஜன், சிந்தியா, கனடாவைச் சேர்ந்தவர்களான அச்சுதன், சபாதினி, சாமினி, ஆருதன், மதுமிதா, மற்றும் டினோஜினி, ஹம்சானந்தி, லக்ஷன், அபிநயா, யதுர்ஷனா ஆகியோரின் ~~பெறாமகனுமாவார்~~. பெரியபேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 2015.06.06ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

8/12, கிறீன் வீதி, திருகோணமலை.
தொ. பே : 077 6635863

தகவல்
குடும்பத்தினர்

நியூ உதயன் திருகோணமலை. 026-2220783



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்வு



மண்ணுலகில்
05 - 12 - 1954

விண்ணுலகில்
04 - 06 - 2015

தென்மராட்சியைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை, கிறீன் வீதி,
8/12ஐ வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். தம்பையா பரஞ்சோதி

(ஓய்வுபெற்ற கிராமசேவகர்- திரியாய், கள்ளராவ, குச்சவெளி, தென்மராட்சி)

போரின் சுவடுகள் புரையோடிய
ஊரின் குறை தீர்க்க
உண்மையுடன் உழைத்து
உற்ற நண்பன் ஆனாய்

ஆலயப் பணி தன்னை
ஆர்வமுடன் முன்னெடுக்க
ஆலோசனை வழங்கி
அகம் தன்னில் நிலைத்திருந்தாய்

வருவாய் அற்று வாடி நின்ற
ஆலயங்கள்
தளராமல் வளர்ந்தோங்க
வகை செய்து வள்ளலானாய்

நற்சிந்தனையோடு
நற்பணிகள் புரிந்து
நட்புறவோடு
நவின்றாய் நல்வார்த்தைகளை

ஓய்வுபெற்ற பின்பும்
ஓயாமல் செய்து வந்த
சமூகத் தொண்டுகளால்
சன்மார்க்கம் சிருஷ்டித்தாய்

இன்னும் பல ஆண்டுகள்
புகழோடு நீ வாழ - நாம்
மனம் கொண்ட போதும்
இவ்வுலக வாழ்வுதனை
இடை நடுவே நிறுத்திவிட்ட தெண்ணி
கண்ணீர் சிந்துகின்றோம்
கடவுளிடம் வேண்டுகின்றோம்
ஆத்ம சாந்திக்காய்...

**அணைந்த விளக்குகளாக
உங்கள் முன் நிற்கும்
குச்சவெளி வாழ் மக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
1954
12
05



உதிர்வு
2015
06
04

தென்னமரவாடியைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை, கிறீன் வீதி,
8/12 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். தம்பையா பரஞ்சோதி

(ஓய்வுபெற்ற கிராமசேவகர் - திரியாய், கன்னராவ, குச்சவெளி, தென்னமரவாடி.)

விழிநீர் சொரிகின்றோம்
ஐயா! சென்றீரோ எமைப் பிரிந்து,

நமதூரில் நல்லவைகள் நடத்தி வைத்தீர்
நயந்து பல நன்மைகளைச் செய்து வைத்தீர்
நாதியற்று நாமிங்கு வந்தபோது
நலமாக எமை மீள் குடியேற்றிவைத்தீர்.

விழிநீர் சொரிகின்றோம்
ஐயா! சென்றீரோ எமைப் பிரிந்து,

நிமிர்ந்து நின்றீர் உம் துணிவு மெச்சுகின்றோம்
உயர்ந்து நின்றீர் உம் நேர்மை போற்றுகின்றோம்
எழுந்து நின்றீர் எம் வாழ்வை வளமாக்க
பணிந்து பல கடமைகளை ஆற்றி வந்தீர்

விழிநீர் சொரிகின்றோம்
ஐயா! சென்றீரோ எமைப் பிரிந்து,

பாரினிலே பரஞ்சோதி ஐயா உந்தன்
புகழ்பூத்த திரு நாமம் என்றும் வாழும்
விழிநீரால் உம் பாதம் கழுவுகின்றோம்
கண்ணீரைக் காணிக்கை ஆக்குகின்றோம்

### திரியாய் கிராம மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 |  | 04 |
| * | | * |
| 12 | | 06 |
| * | | * |
| 1954 | | 2015 |

## அமரர். தம்பையா பரஞ்சோதி

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திப்பதோடு
அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்
உற்றார் உறவினர் அனைவருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

தகவல்
கிராம அபிவிருத்தி சங்கம்
தென்னமரவாடி

இமேஜ் அச்சகம் ✆ 2225796



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 | | 04 |
| * | | * |
| 12 | | 06 |
| * | | * |
| 1954 | | 2015 |



## அமரர். தம்பையா பரஞ்சோதி

வார்த்தையை தேனாக்கும்
வல்லமை படைத்த மாமாவே
உயிரோடு உங்களைக் கண்டு
உறவாட நினைத்தோமே!
கனவாய் போய் விட்டதே மாமா!

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திப்பதோடு
அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்
உற்றார் உறவினர் அனைவருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

நாகரெத்தினம் சண்முகநாதன்
குடும்பத்தினர்
5ம் வட்டாரம்,தென்னமரவாடி

இமேஜ் அச்சகம் ✆ 2225796



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 1954 12 05

விண்ணில் 2015 06 04

## அமரர். தம்பையா பரஞ்சோதி

(ஓய்வு பெற்ற கிராம அலுவலர்)

அன்னார் காலஞ்சென்ற தம்பையா புனிதம் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற கந்தையா பத்மாவதி தம்பதிகளின் மருமகனும் திருமகள்தேவியின் பாசமிகு கணவரும் ஆவார். அன்னார் சர்வானி, கரிசன், தக்சாயினி, திலுஸ்கா, ரிசிபரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். அன்னார் நந்தகுமார், சரோஜினிதேவி, அருட்செல்வம், சோதிசிவம், புஸ்பராஜா மற்றும் காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

நன்றி

தகவல்
தென்னமரவாடி கிராம உத்தியோகத்தர்
தென்னமரவாடி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்
தென்னமரவாடி வாழ் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசகர் அருளிய



# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
    சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
    மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
    போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
    ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய் 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
    பேசும்போ தெப்போ திப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
    சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
    கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
    ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய் 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
    அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
    பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைத்தீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
    எந்தோநின் அன்புடைமை எல்லாம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடரோ நம் சிவனை
    இத்தனையும் வேண்டும் எமக்கேலார் எம்பாவாய் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடலோர் எம்பாவாய் 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான்ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையான் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 7

கோழி சிலம்புச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையேயெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோ மேலோர் எம்பாவாய். 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதோர் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்ட ருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடி யோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகை யெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமை யேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைத் கார்மலரால் செங்கமலப் பைம்போதால
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றெ நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கும்நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீற்றாற்போல
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய்நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோர் எம்பாவாய். 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற்பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கு அப்பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லாதோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கேழிலென் ஞாயிறெமக் கேலோர் எம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி, அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய் 20





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச ஊழியர்கள் ஓய்வூதியத்தை துரிதமாக பெற தேவையான ஆவணங்கள்

அரச உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும்போது ஓய்வூதியச்சம்பளக் கொடுப்பனவைத் துரிதப்படுத்த உத்தியோகத்தரினது சுயவிபரக் கோவையில் இருக்க வேண்டிய முக்கிய ஆவணங்கள் இல்லாமையே இக்கால தாமதத்திற்கு காரணமாக வுள்ளதென்பதை அவதானிக்க முடிகின்றது. எனவே ஒவ்வொரு உத்தியோகத்தரும் தமது சுயவிபரக்கோவையில் இருக்க வேண்டிய ஆவணங்கள் தொடர்பாக தமது கவனத்தைச் செலுத்துதல் ஓய்வூதிய நடவடிக்கையை துரிதப்படுத்தும் செயலாகும். எனவே ஒரு சுயவிபரக் கோவையிலும் இருக்க வேண்டிய ஆவணங்கள் தங்களுக்கு அறியத்தரப் படுகின்றன. தாங்கள் சுயவிபரக் கோவையில் கீழ்க் காட்டப்பட்டுள்ள ஆவணங்கள் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

01. நிரந்தமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனக் கடிதம்.
02. நியமனம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை நிரூபிக்கும் கடிதம் அல்லது உடமை பொறுப்பேற்றல்.
03. தகுதிகாண் நிலைக்காலம் நீடிக்கப்பட்டிருப்பின் அதற்குரிய கடிதங்கள்,
04. மருத்துவ அறிக்கை.
05. சேவையில் நிரந்தரப்படுத்திய கடிதம் / பதவியில் உறுதிப்படுத்திய கடிதம்.
06. சத்தியப்பிரமாணம் / உறுதியுரை.
07. அமைய சேவைக்காலம் இருப்பின் அதற்குரிய கடிதங்கள்.
08. விதவைகள் அநாதைகள் அங்கத்துவ அட்டையின் ஒரு புகைப்படப் பிரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. அரசாங்க சேவை சகாய நிதியில் பங்குகொண்ட கடிதங்கள்.
10. கோவையில் பதவியுயர்வுடன் தொடர்புடைய கடிதங்கள்.
11. சம்பள ஏற்றங்கள் அங்கீகரிக்கப்பட்ட கடிதங்கள்.
12. இடமாற்றங்களுக்கு உரிய கடிதங்கள்.
13. வினைத்திறன்காண் தடைகளில் சித்தியடைவதற்குரிய அல்லது அவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டதற்குரிய கடிதங்கள்.
14. ஊழியரின் பிறப்புச் சான்றிதழ்.
15. விவாகச் சான்றிதழ்.
16. பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்.
17. வெளிநாடுகளில் பிறந்த பிள்ளைகள் இருப்பின் அவர்களின் பிறப்புகள் இலங்கையில் பதிவு செய்யப்பட்டதை நிரூபிக்கப்பட்ட கடிதங்கள்.
18. விவாகரத்து செய்யப்பட்டிருப்பின் அவ்வழக்குத் தீர்ப்பின் ஒரு பகுதி.
19. மீண்டும் விவாகமாகியிருப்பின் விவாகச்சான்றிதழ்.
20. வாழ்க்கைத் துணைவர் அல்லது பிள்ளைகள் மரணித்திருப்பின் அவர்களின் மரணச் சான்றிதழ்.
21. வலது குறைந்த பிள்ளைகள் இருப்பின் அவர்களின் வலது குறைவை நிரூபிக்கின்ற மருத்துவச் சான்றிதழ்களும் உரிய மற்ற சான்றிதழ்களும்.
22. வாழ்க்கைத் துணைவர் தொழில்புரிபவராயின் அது பற்றிய விபரங்கள்.
23. தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதி அல்லது சாரதி உத்தரவுப் பத்திரம் இருப்பின் அதன் புகைப்படப் பிரதி ஒன்று.
24. கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள்.
25. தொழில்சார் தகைமைகள் பெற்றிருப்பின் அச்சான்றிதழ்களின் பிரதிகள்.
26. உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சியின்போது பெறப்பட்ட சான்றிதழ்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. அரைச்சம்பள விடுமுறைகள் மற்றும் சம்பள மற்ற விடுமுறைகள் பற்றிய விபரங்ளகள்.
28. பிரசவ விடுமுறைகள் பற்றிய விபரங்கள்.
29. திடீர் விபத்துக்கான விடுமுறை பற்றிய விபரங்கள்.
30. வெளிநாட்டு விடுமுறை பற்றிய விபரங்கள்.
31. முற்பட்ட ஆண்டுகளில் விடுமுறைகள் பெற்றிருப்பின் உரிய விபரங்கள்.
32. கற்கை விடுமுறைகள் பெறப்பட்டிருப்பின் உரிய விபரங்கள்.
33. வருடாந்த விடுமுறை அறிக்கைகள் (பெற்றுக் கொள்ளப்படாத விடுமுறைகளுக்காக ஓய்வு பெறும் தறுவாயில் கொடுப்பனவுகள் செய்யப்படுவதால்)
34. பதவி வெறி தாக்கல் கட்டளையும் திரும்பச் சேவையில் அமர்த்தும் கட்டளைகளும்.
35. ஒழுக்காற்று கட்டளைகளும் அக்கட்டளை நடை முறைப்படுத்திய கடிதங்களும்.
36. ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்காக சமர்ப்பித்த மேன்முறையீடு பற்றிய தீர்மானங்கள்.
37. இரண்டாம் நிலை அடிப்படையில் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட கடிதங்கள் (இருக்குமாயின்)
38. இரண்டாம் நிலை அடிப்படையில் இந்தக் காலத்தில் அந் நிறுவனத்தால் ஓய்வுச் சம்பளத்திற்காக சம்பளத்திலிருந்து 25 வீதம் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டவை நிரூபிக்கும் கடிதங்கள்.
39. மாகாண சேவைக்கு விடுவித்தல் பற்றிய கடிதங்கள்.
40. மாகாணசேவையிலிருந்த அரசசேவைக்கு உள்ளீர்க்கப் பட்ட கடிதங்கள்.
41. சேவை பாராட்டப்பட்ட கடிதங்களும் குற்றம் குறை தெரிவித்த கடிதங்களும்.
42. கடன்பெறப்பட்டதற்கான கடிதங்கள்.
43. நாளதுவரைபடுத்தி விதிமுறையாக பேணிவருகின்ற வரலாற்றுத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. அரச விடுதியில் வசிப்பதாக இருந்தால் வீட்டு வாடகை, மின்சாரம், தொலைபேசிக் கட்டணங்கள் செலுத்தப் பட்டுள்ளதற்கான அறிக்கைகள்.
45. பெயர் மாற்றக்கடிதம் (கடமையின்போது திருமணமாகிய பெண் உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)
46. உடன்படிக்கை படிவம்.
47. சொத்து பிரகடனம்.
48. கணவர் மனைவியின் / பிறப்புச் சான்றிதழ்.
49. உரிய வேறு ஆவணங்கள்.

இந்த ஆவணங்களில் தங்களுக்குப்பொருத்தமான ஆவணங்கள் இதுவரையில் சமர்ப்பிக்கப்படாதிருப்பின் அவற்றைத் தங்களுக்குரிய திணைக்களங்களில் விரைவில் கையளிக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு நீரகங்களின் தொழிற்பாடும் அதனைப் பாதுகாத்தலும்

**நீரிழிவு உங்கள் உடலை எவ்வாறு பாதிக்கிறது?**

குருதியில் வெல்ல அளவு கட்டுப்படுத்தாவிடின் உடலிலுள்ள சிறிய குருதிக்கலன்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால் சிறுநீரகங்கள், கண்கள், தோல்கள், நரம்புகள், தசைகள், குடல், இதயம் என்பன பாதிக்கப்படுகின்றன.

**நீரிழிவு சிறுநீரகங்களை எவ்வாறு பாதிக்கிறது?**

சிறுநீரகங்களிலுள்ள குருதிக்கலன்கள் பாதிப்படைவதால் முதலில் சிறுநீருடன் புரதம் வெளியேறும். பின்பு சிறுநீரகங்களால் குருதியை சரியான முறையில் சுத்திகரிக்கமுடியாது. இதனால் மேலதிக நீர், உப்புகள், நைதரன் கழிவுப்பொருட்கள் (யூரியா) உடலில் அதிகரிக்கின்றன. இதனால் நிறை கூடும். உடலில் வீக்கம் ஏற்படும். நீரிழிவு நரம்புகளையும் சிதைவடையச் செய்கிறது. இது சிறுநீர் கழிக்கும் தொழிற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே சிறுநீர்ப்பையிலுள்ள அதிக சிறுநீரால் ஏற்படுத்தப்படும் அமுக்கம் சிறுநீரகங்களை சிதைவடையச் செய்வதோடு சிறுநீர் அதிகநேரம் சிறுநீர்ப்பையில் தேங்குவதன் 'காரணமாக தொற்றுதல்களேற்படும். இதற்கு காரணம் சிறுநீரில் அதிகளவில் வெல்லமிருப்பதால் பக்ரீறியாக்கள் அதிகளவில் பெருக்கமடைவதாலாகும்.

**நீரிழிவு நோயாளிகளில் எத்தனை சதவீதத்தினர் சிறுநீரக நோயால் பாதிக்கப்படுவர்?**

| | | |
|---|---|---|
| வகை 1 | - | ஏறத்தாழ 30% |
| வகை 2 | - | ஏறத்தாழ 10 - 40% |

**நீரிழிவு நோயாளிகளில் சிறுநீரகம் பாதிக்கப்படும் போதேற்படும் ஆரம்ப அறிகுறிகள்?**

சிறுநீரில் Albumin வெளியேறலே முதல் அறிகுறியாகும். இவ் அறிகுறியை சாதாரண சிறுநீர்பரிசோதனை மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டறிதல் கடினம். இதனைக் கண்டறிய தற்போது விசேட பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன. (Microalbumin Test). எனவே நீரிழிவு நோயுள்ளவர்கள் இப் பரிசோதனையை வருடா வருடம் செய்வதால் சிறுநீரகப் பாதிப்பை முன் கூட்டியே அறியலாம்.

**நீரிழிவு நோயாளிகளில் சிறுநீரகம் பழுதடைவதாலேற்படும் அறிகுறிகள்?**

சிறுநீரகங்கள் செயலிழப்பதால் குருதியிலுள்ள நைதரசன் கழிவுப் பொருட்களின் அளவு (Urea, creatinine) அதிகரிக்கும் அத்துடன் வாந்தி, பசியின்மை, பலவீனம், அதிககளைப்பு, தசைப்பிடிப்பு (பெரும்பாலும் காலில்) குருதிச்சோகை என்பனவும் ஏற்படலாம். பாதிக்கப்பட்ட சிறுநீரகங்கள் இன்சுலினை குறைந்தளவில் அழிவடையச்செய்வதால் உங்களுக்கு நீங்கள் முன்னர் உபயோகித்த அளவைப்பார்க்க குறைந்தளவு **Insulin** தேவைப்படுவதாக தோன்றலாம். எனவே இவ்வாறான அறிகுறிகள் தென்படுமானால் உங்கள் வைத்தியரை நாடுங்கள்.

**நீரிழிவு நோயளர்கள் சிறுநீர் கசிவதை தடுப்பதற்கான வழிவகைகள்?**

குருதியில் **glucose** இன் அளவை சிறந்த முறையில் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதனால் சிறுநீரகங்கள் சிதைவடைவதை இயன்றளவு குறைத்துக் கொள்ளலாம். இதனை விட முக்கியமாக உங்கள் குருதியமுக்கத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியம். மற்றும் சிறுநீரில் வெளியேறும் **albumin** ஐ வருடத்துக்கு ஒரு முறையாவது சோதனை செய்வதும் அவசியமாகும். வைத்திய ஆலோசனையின் பெயரில் குருதியமுக்கத்திற்காக மாத்திரைகளை உள்ளெடுப்பதும் **albumin** வெளியேறலை தடுப்பதற்கான மாத்திரைகளை உள்ளெடுப்பதும் அவசியமாகும். நித்திரையும் ஒழுங்கான உடற்பயிற்சியும் அவசியமாகும். மதுபானம், புகைத்தல், தவிர்க்க வேண்டும். பெரும்பாலான நீரிழிவு நோயாளிகள் சிறுநீரக நோயை கொண்டிருப்பதில்லை. எனவே நீரிழிவு நோயாளிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநீரகங்கள் எப்போது செயலிழக்கும் எனக் கூறமுடியாது. சிறுநீரக சிதைவு உண்டாகக்கூடிய வழிவகை பற்றி வைத்தியருடன் கலந்துரையாடவும்.

**பழுதடைந்த சிறுநீரகங்களை கூடிய காலம் தொழிற்படச் செய்வது எவ்வாறு?**

- உடல் உயரத்துக்கேற்ற நிறையைப் பேணல்
- குருதியில் வெல்லத்தினளவை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்
- குருதியமுக்கத்தை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்
- சிறுநீரகங்களை பாதிக்கும் தேவையற்ற மருந்துகள்

  உள்ளெடுத்தலை தவிர்த்தல் **(Indocid, brufen)**
- உடலில் மேலதிக நீர் சேர்வதையோ, கூடுதலான நீர் வெளியேறலையோ தடுத்தல்.
- சிறுநீரகத்தில் தொற்று வந்தால் விரைவாக குணப்படுத்தல்.
- இயன்றளவு புரதம், உப்பு, பொற்றாசியம் உள்ள உணவுகளை தவிர்த்தல்.

**சிறுநீரகங்களின் தொழிற்பாடு என்ன?**

- உடலின் பிரதான அங்கங்களுள் ஒன்றான சிறுநீரகங்கள் பல்வேறு தொழில்களை புரிகின்றன.
- உடற்கழிவுகளையகற்றல் **(Urea, Creatinine) hormone** களின் மூலம் குருதியமுக்கத்தை சீராக்கல்.
- **$Ca^{2+}$, $PO_4^{3-}$** சமநிலையைப் பேணுவதன் மூலம் என்புகளின் உறுதித் தன்மையைப் பேணல்.
- உடலிலுள்ள மேலதிக நீரை அகற்றல்.

**சிறுநீரகங்கள் எங்கே அமைந்துள்ளன?**

சிறுநீரகங்கள் அவரைவித்து வடிவானவை **8-10cm** நீளமும் **4-5cm** அகலமும் கொண்டவை. இது முதுகின் உட்புறமாகவும் உடலின் கீழுள்ள விலா என்புகளுக்கு உட்புறமாகவுமுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***சிறுநீரகங்கள் தொழிற்பாட்டை இழப்பதற்கான காரணங்கள்?***

சிறுநீரக அழற்சி **(Nephritis)** நீரிழிவு **(Diabetes)**

உயர்குருதியமுக்கம் **(Hyper tension)**

நீண்டகாலத்தொற்று **(Chronic Infection)**

சிறுநீரகக்கல் **(Kidney Stone)**

நச்சுப்பொருட்கள் **(Toxin)**

பரம்பரை காரணிகள் **(Genetics)**

***சிறுநீரக செயழிலப்பு இருவகைப்படும்***

**Acute renal failure (ARF)** சடுதியாக சிறுநீரக தொழிற்பாடு தடைப்படல் அனேகமாக மீளக்கூடியது.

உ-ம் பாம்புக்கடி, செப்டிசீமியா, சடுதியான குருதியிழப்பு உடலிலிருந்து அதிக நீரிழப்பு, வயிற்றோட்டம், வாந்தி.

**chronic renal failure (ARF) :-** நாட்பட்ட, தொடர்ச்சியான, மீளமுடியாத சிறுநீரக செயலிழப்பு.

உ-ம் உயர் குருதியமுக்கம், நீரிழிவு, **chronic nephritis, poly cystic kidney disease, drugs,**

சிறுநீரகத்தின் தொழிற்பாடு குறைவதை காட்டும் அறிகுறிகள்? களைப்பு, சோம்பல் கை, கால் முக வீக்கம் சிறுநீருடன் குருதி வெளியேறல் பசி குறைதல் வாந்தி ஓங்காளம் நாரிநோ அடிக்கடிசிறுநீர் கழித்தல்

எவ்வாறு எமது சிறுநீரகங்களை பழுதடையாது பாதுகாக்கலாம்.?

- குருதியமுக்கத்தை குறைந்தது வருடத்துக்கு ஒரு முறையாவது பரிசோதித்தல்.
- அதிகளவு திரவங்களையுட் கொள்ளல்.
- குருதியில் வெல்லத்தினளவை வருடத்துக்கு இருதடையாவது பரிசோதித்தல்.
- புகைபிடித்தலை நிறுத்தல்.

குருதியில் கொலஸ்ரோலினளவை வருடத்துக்கு இரு தடவையாவது பரிசோதித்தல்.

உடல் உயரத்துக்கேற்ற நிறையைப் பேணல்.

வருடா வருடம் ஒரு தடவையாவது வைத்தியரிடம் ஆலோசனை பெறல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீட்டில் செய்யப்படும் சலப் பரிசோதனை.**

**சிறுநீரில் குளுக்கோஸ் இருப்பதை சோதித்தல்:-**

சோதனைக் குழாயில் பெனடிக்ற் கரைசலெடுத்து அதனுள் 8 துளிகள் சிறுநீரைச் சேர்த்து மதுசார விளக்கில் அல்லது எரியும் மெழுகுதிரியில் திரவக் கரைசல் கொதிக்கும் வரை பிடித்தல் ஆறியபின் கரைசலின் நிறத்தை அவதானித்தல்.

| | | |
|---|---|---|
| நீலம் | - | குளுக்கோஸ் இல்லை |
| பச்சை | - | சிறிதளவு குளுக்கோஸ் |
| மஞ்சள் | - | ஓரளவு குளுக்கோஸ் |
| செம்மஞ்சள் | - | அதிகளவு குளுக்கோஸ் |
| கடும்சிவப்பு | - | மிகையான குளுக்கோஸ் |

நீலம் தவிர்ந்த மற்றைய நிறங்களிருப்பின் வைத்தியரின் உதவியை நாடவும்.

**நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பு (Choronic Renal Failure)** மற்றும் இறுதிநிலை சிறுநீரக செயலிழப்பு **(End Stage Renal Failure)** ஏற்படும் போது செய்யக்கூடிய சிகிச்சை வழிகள்.

**நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பு (Choronic Renal Failure) என்றால் என்ன?**

சிறுநீரகங்கள் உடல் சமநிலையைப் பேண முடியாது போகும் நிலையாகும். இதன்போது சிறுநீரகங்கள் தொடர்ச்சியான மீளமுடியாத பாதிப்பிற்கு உள்ளாகின்றது. ஒரு நிலையில் அது முற்றாக செயலிழக்கின்றது. இது இறுதிநிலை சிறுநீரக செயலிழப்பு எனப்படும்.

**சிறுநீரகம் பழுதடையும் போது செய்யக்கூடிய சிகிச்சைமுறை என்ன?**

ஓரளவு சிறுநீரகம் பழுதடைந்திருக்கும்போது இதற்குக் காரணமான காரணியைக் கண்டுபிடித்து அதற்கு சிகிச்சையளித்தல் மற்றும் உணவுக் கட்டுப்பாடு தேவையான மருந்துகளைப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுநீரக செயலிழப்பிற்கான சிகிச்சை முறை ஒருவருடைய சிறுநீரகங்களைப் பழையநிலைக்கு கொண்டு வரமுடியுமா?**

இல்லை, சிகிச்சையாவது சிறுநீரகங்களைப் பழைய நிலைக்குக் கொண்டுவராது ஆனால் இது சிறுநீரகத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களை தாமதமாக்குவதோடு இறுதிநிலை சிறுநீரக செயலிழப்பு ஏற்படுவதையும் தாமதமாக்கும்.

**இறுதிநிலை சிறுநீரக செயலிழப்பிற்கான சிகிச்சை வழிகள் யாவை?**

**இருவழிகள் உண்டு**

01. சிறுநீரக மாற்றீடு **(Kidney Transplantation)**
02. குருதிச் சுத்திகரிப்பு **(Dialysis)**

**இறுதி நிலை சிறுநீரக செயலிழப்பிற்கான குருதிச் சுத்திகரிப்பு சிகிச்சை முறையானது ஒருவரது சிறுநீரகங்களைப் பழைய நிலைக்கு கொண்டு வருமா?**

இல்லை அவர்கள் உயிர்வாழும் காலம் வரைக்கும் குருதிச் சுத்திகரிப்பு **(Dialysis)** குறித்த இடைவேளைகளில் செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

**குருதிச் சுத்திகரிப்பு (Dialysis) என்றால் என்ன?**

குருதியில் இருந்து கழிவுகளையும் மேலதிக நீரையும் வெளியேற்றுவதற்கான சிகிச்சை முறையாகும்.

இது இருவகைப்படும்.

**Haemo Dialysis (HD)**
**Peritoneal Dialysis (PD)**

**குருதிச் சுத்திகரிப்பு (Haemo Dialysis) என்றால் என்ன?**

உடலிற்கு வெளியாகும் உபகரணத்தைப் பயன்படுத்திக் குருதியைச் சுத்திகரிக்கும் முறையாகும். இதற்கு 4-5 மணித்தியாலங்கள் தேவைப்படும். ஒரு கிழமையில் 2 அல்லது 3 தடவைகள் இதனை மேற்கொள்ள வேண்டும். வைத்தியசாலையில் இச்சிகிச்சை முறையானது அளிக்கப்படும். இச்சிகிச்சையானது நீண்டகாலம் தேவைப்படுவதால் வைத்தியசாலையில் மட்டுமல்லாமல் வீடுகளிலோ **Dialysis center** களிலோ மேற்கொள்ளப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுநீரக செயலிழப்பின் போது பயன்படுத்தப்படும் மருத்துவ வகைகள்.**

உங்களுக்கு சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டால் உங்களது சிறுநீரகங்கள் முன்பு தொழிற்பட்டது போல் தொழிற்படாது எனவே உங்கள் வைத்தியர் சில மருந்துகளைப் பயன்படுத்துமாறு கூறுவார். அம்மருந்துகள் பற்றி இங்கு விளங்கிக் கொள்வோம்.

**எவ்வளவு காலம் ஒருவர் இந்த மருந்தை உபயோகிக்க வேண்டும்?**

வைத்தியர் உங்களுக்கு சிகிச்சை முறை தொடங்கியதிலிருந்து தொடர்ந்து மருந்தை உபயோகிக்க வேண்டும். உங்களுக்கு மருந்துகளைப் பாவிக்கும் போது பக்கவிளைவுகள் தோன்றுமிடத்து தயவுசெய்து வைத்தியரையோ அல்லது மருந்து விநியோகத்தரையோ நாடுங்கள்.

**எப்போது ஒருவர் இந்த மருந்தை உபயோகிக்க வேண்டும்?**

நீங்கள் உங்கள் மருந்தை வைத்தியரின் ஆலோசனைக்கமைய அவர் கூறும் காலத்தில் எடுக்க வேண்டும். உதாரணமாக சில மருந்துகள் உணவு உட்கொண்ட பின்பு அல்லது உணவு உட்கொள்ள முதல் எடுக்கவேண்டும். சில மருந்து வகைகள் காலை வேளைகளில் அல்லது மாலை வேளைகளில் எடுக்கப்பட வேண்டும். உங்களுக்கு சரியாகப் புரிந்துகொள்ளாத விடத்து மருந்துகள் உபயோகிக்கும் கால அட்டவணையை மருந்து விநியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். வைத்திய ஆலோசனைப்படி மருந்துகளை உபயோகிப்பதால் பக்கவிளைவுகள் ஏற்படுவதை இயலுமானவரை குறைக்கலாம்.

**Peritoneal Dialysis என்றால் என்ன?**

வயிற்றுக்கு உட்புறமாக இயற்கையாகக் காணப்படும் மென்சவ்வைப் பயன்படுத்தி குருதியைச் சுத்திகரித்தல் **Peritoneal Dialysis** ஐத் தொடங்குவதற்கு முன்னர் அதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷேட **Dialysis** குழாய்க் **(tube)** ஐ வயிற்றினுள் உட்புகுத்தி **Dialysis** ஐத் தொடங்கலாம். விஷேடமாகத் தயாரிக்கப்பட்ட திரவத்தை வயிற்றினுள் இக்குழாய் மூலம் செலுத்தவேண்டும். இத்திரவமானது வயிற்றின் உட்புறம் இருப்பதோடு இது நாளொன்றுக்கு 4-5 தடவைகள் புதுப்பிக்கப்படவேண்டும். ஒவ்வொரு நாளும் இது மேற்கொள்ளப்பட வேண்டும்.

இச்சிகிச்சை முறையானது வீடுகளிலும் வேலை செய்யும் போதும் பயன்படுத்தலாம். நோயாளி அவரது குடும்ப அங்கத்தவர்கள் இச்சிகிச்சையைச் செய்வதற்கான முறையை அறிந்திருத்தல் வேண்டும்.

**குருதிச் சுத்திகரிப்பு செய்வதன் மூலம் ஒருவர் சதாரண சுகவாழ்வைப் பெறமுடியுமா?**

ஆம் ஒருவரின் உடல் முன்னேற்றத்தை சிலகால குருதிச் சுத்திகரிப்பின் பின்னர் உணர முடியும். தொடர்ச்சியாக சுத்திகரிப்பு செய்வதன் மூலம் அவர் சாதாரண சுகவாழ்வு வாழலாம்.

**ஒருவர் குருதிச் சுத்திகரிப்பு செய்யும்போது முன்பு பாவித்த மருந்துகள் உணவுக் கட்டுப்பாடு அவசியமா?**

ஆம் குருதிச் சுத்திகரிப்பானது சாதாரண சிறுநீரகங்கள் செய்யும் முழுத் தொழிற்பாட்டையும் செய்யமாட்டாது. எனவே தேவையான மருந்து வகைகள் மற்றும் உணவுக்கட்டுப்பாடு அவசியமாகும்.

**ஒருவர் பலவிதமான மருந்தை உபயோகிக்க வேண்டி உள்ளது அவர் அனைத்து வகைகளையும் ஒரே தடவையில் உட்கொள்ள இயலுமா?**

அனைத்து மருந்துகளையும் ஒரே தடவையில் எடுக்க இயலாது. ஏனெனில் சில சமயங்களில் ஒன்றாக உட்கொள்ளும் போது ஆபத்து ஏற்பட வாய்ப்புண்டு. எந்தெந்த மருந்துகளை ஒரே நேரத்தில் உபயோகிக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனையை வைத்தியரிடம் அல்லது மருந்து விநியோகத்தரிடம் கேட்டுப்பெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநீரக செயலிழப்பு ஏற்படும் போது பல்வேறு வகையான மருந்து வகைகள் உபயோகிக்கப்படுகின்றன. அவையாவன...............

**சிறுநீரை வெளியேற்றக்கூடிய மருந்துகள் (Diuretics)**

இந்த மருந்து வகைகள் உடலில் இருந்து மேலதிகமாகவுள்ள நீரை வெளியேற்றச் செய்கின்றன. கால்களில் வீக்கம் ஏற்படும் போது, சுவாசிப்பதில் கஷ்டம் ஏற்படும் போது இந்த மருந்துகளை உபயோகிக்க வைத்தியரால் ஆலோசனை வழங்கப்படும். இம்மருந்துகள் சில வேளைகளில் கூடிய நீரிழப்பு, இதயத்துடிப்பில் மாற்றம் ஆகிய பக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். அப்போது வைத்திய ஆலோசனையைப் பெறவும் இந்த வகுப்பைச் சேர்ந்த மருந்துகள் **Lasix, HCT**

**எலும்புகளை உறுதியாக்கும் மருந்தகள்.**

சிறுநீரக செயலிழப்பு ஏற்படும்போது உடலில் கல்சியம், பொசுப்பேற்று போன்ற கனியுப்புக்களின் மட்டங்களைப் பேணுவதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை என்பதால் இவற்றை சீர்படுத்த மருந்துகள் உபயோகிக்கப்படுகின்றன இந்த வகுப்பைச் சேர்ந்த மருந்துகளாவன. **Calciterol, Rocatrol, Rejucalcium, ca cargonate**

**குருதியின் கிமோகுளோபின் அளவைப்பேண உதவும் மருந்தகள்.**

சிறுநீரக செயலிழப்பின் போது குருதிச் சோகை ஏற்படுவது இயல்பு இதற்குக் காரணம் செங்குதிச் சிறுதுணிக்கைகளை உற்பத்தி செய்யும் **Erythropoietin** எனும் ஓமோன் சிறுநீரகத்தால் குறைந்தளவு உற்பத்தி செய்யப்படுதல் ஆகும். நீங்கள் இதை நிவர்த்தி செய்ய பயன்படும் மருந்துவகைகள்.

உ-ம்:- **Erythropoietin, Iron tablets**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதியமுக்கத்தை கட்டுப்படுத்தும் மருந்துகள்

சிறுநீரக செயலிழப்பின் போது குருதியமுக்கம் அதிகரிக்கின்றது. இதனைக் கட்டப்படுத்துவதன் மூலம் சிறுநீரகம் பழுதடைவதைத் தாமதப் படுத்தலாம். எனவே வைத்திய ஆலோசனையின் படி குருதி யமுக்கத்தைக் கட்டுப்படுத்தும் மருந்துகளை பாவிக்க வேண்டும் சிலவேளைகளில் உபயோகிக்கும் போது குருதியமுக்கம் கூடுதலாகக் குறைவதால் தலைச்சுற்று, மயக்கம், ஏற்படலாம் அப்போது வைத்திய ஆலோசனையைப் பெறலாம். வழமையாகப் பயன்படுத்தப்படும் மருந்துகள்.

**Aldomet, Atenolol, Hydralazine, Prazozine, HCT, Nefedipine, Verapamil** இவற்றைத் தனியாகவோ அல்லது **combinition** ஆகவோ பயன்படுத்தலாம்.

## விற்றமின்கள் (Vitamins)

உங்கள் உடலில் குறைபாடாகவுள்ள விற்றமின்களை மருந்துகள் மூலம் மீளச் சரிசெய்வது மிக முக்கியமான விடயம் இதில் விற்றமின் **B**. விற்றமின் **D, Folate** என்பன அடங்குகின்றன. உங்கள் வைத்தியர் எந்தெந்த விற்றமின்களை எடுக்க வேண்டும். என்பதற்குரிய ஆலோசனையை வழங்குவார்கள்.

## Hepatitis B தடுப்பூசி

உங்களுக்கு சில வேளைகளில் இரத்த மாற்றீடு மற்றும் குருதிச் சுத்திகரிப்புச் செய்யவேண்டியிருப்பதால் குருதியால் பரவும் **Hepatitis B** நோய் ஏற்ப வாய்ப்புள்ளது. எனவே இதைத் தடுப்பதற்கு **Hepatitis B** தடுப்பூசி போட வேண்டும் வைத்திய ஆலோசனையைப் பெறவும்.

மூலம்

**Dialysis Unit**
**Teaching Hospital**
**Jaffna.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சம்

**தம்பையா - புனிதம்**

↓

சரோஜினி தேவி
நந்தகுமார்
**பரஞ்சோதி**
அருட்செல்வம்
சோதிசிவம்
புஷ்பராஜா
பாலகிருஷ்ணன்

**கந்தையா - பத்மாவதி**

↓

திருமகள் தேவி
சிவகுமாரி
சிவனேஸ்வரன்

(பரஞ்சோதி — திருமகள் தேவி) ↓

சர்வாணி
ஹரிசன்
தட்சாயினி
திலுஸ்கா
ரிஷியரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எம் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எமக்கு நல்வழி காட்டி, வாழவைத்த எம் அன்பு தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியும், பதாதைகள் , மலர்வளையம் காட்சிப்படுத்திய நிறுவனங்களுக்கும் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், தந்தியில் அனுதாபம் தந்தோருக்கும் தொலைபேசியில் ஆறுதல் கூறியும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டும் எமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைத்து நெஞ்சங்களிற்கும் எம் இதயம் கனிந்த என்றும் மறவா நன்றியை நவில்கின்றோம்.

— குடும்பத்தினர் —

8/12, கிறீன்வீதி
திருக்கோணமலை
0776635863

• தொகுப்பாசிரியர் : சுந்தா (0756901316)
• அச்சு : ஏ.ஆர்.டிரேடர்ஸ் 0777695656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




[redacted]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org